Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1352)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (01.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 184
















## அரசுக்கு அச்சமாம் கூறுகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை காரணமாக அரசாங்கம் அச்சமடைந்து, பாதிப்பான மனநிலையில் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா யோசனை தொடர்பில், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் ஒரு நிலைப்பாடின்றி, அவசரமாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அரசாங்கம், தமக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## நிபந்தனைகளை நிறைவேற்ற வரி

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்.) நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகவே நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொருளியலாளரும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் சபைக்கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. இடைநிறுத்தப்பட்டுள்ள கடன் விவகாரம் அக்கூட்டத்தின்போது

19 ஆம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழு மூலமாகவே தமிழருக்கு நிரந்தரத் தீர்வு

## தமிழ்க் கட்சிகளை இணையுமாறு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(கொழும்பு)

சகல தமிழ் கட்சிகளும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்களிப்பு செய்வதன் மூலமே தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் வாசஸ்தலத்திற்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட பிரித்தானிய நாடாளுமன்றப் பிரபுக்கள் சபை உறுப்பினரும், பிரித்தானிய நாடாளுமன்றத்தின் சர்வகட்சி இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைவரும், பிரிவி கவுன்சில் உறுப்பினருமான நெஸ்பி பிரபு உள்ளிட்ட குழுவினருடனான விசேட சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அரசியல் தீர்வின் மூலமே இனப்பிரச்சினைக்கு இறுதியானதும், உறுதியானதுமான நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு சகல தரப்பினருடனும் இணக்கப்பாடு காணாமையே கடந்த காலங்களில் அரசியல் தீர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தோல்வி அடைந்ததற்கு காரணமாகும்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஈ.பி.டி.பி. அமைப்பாளரின் பெயரைக் கூறி குழந்தையைக் கடத்தும் முயற்சி முறியடிப்பு



(வடமராட்சி)

வடமராட்சியில் ஈ.பி.டி.பி. அமைப்பாளரின் பெயரைக் கூறி இரண்டரை வயதுக் குழந்தையைக் கடத்த மர்மநபர்களால் எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.10 மணியளவில் வடமராட்சி, துன்னாலை வடக்கு, வீட்டம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்ற இரு மர்ம நபர்கள் குழந்தையின் பெரிய தாயாரின் (விஜயகுமாரி) பெயரைக் குறிப்பிட்டு அவருடைய வீடு இதுவா? எனக் கேட்டுள்ளனர். அதற்கு அங்கிருந்த குழந்தையின் தாயாரான திருமதி சுதாகரன் உதயகுமாரி, ஆம் எனப் பதிலளித்துள்ளார். இங்கு இயலாத ஆள் நீங்களா? எனக் கேட்டுள்ளனர். அதற்கும் ஆம் எனப்பதிலளித்த போது, சந்தோஷை, ரங்கண்ணா கூட்டி வரட்டுமாம் எனக் கூறியுள்ளனர். அப்போது குழந்தையின் தாயார், அவர் அப்படிச் சொல்லமாட்டாரே? எனக் கூறிக்கொண்டு, நான் மகனைக் கூப்பிடுகின்றேன் எனத் தெரிவித்து, சக்கர நாற்காலியை வீட்டிற்குள் நகர்த்தியவாறு கையடக்கத் தொலைபேசி மூலம்

19 ஆம் பக்கம் பார்க்க

## சிகரெட், மதுபான விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு

### வாகன வரியும் கூடியது

(கொழும்பு)

சிகரெட் விலை பியர் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் வரிகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து வகை சிகரெட்டுகளின் விலைகளும் ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்படும் பியர் லீற்றர் ஒன்றுக்கான வரி 5 ரூபாவினாலும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பியர் வரி 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சாராயத்தின் வரி 60 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிகரெட் மற்றும் மதுபான வரி அதிகரிப்பு மூலம் மேலும் சுமார் 300 கோடி ரூபா வருமானம் கிடைக்கும் என நிதியமைச்சு மதிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கார், வான், முச்சக்கர வாகனங்கள், மோட்டார் சைக்கிள் உட்பட மோட்டார்

19 ஆம் பக்கம் பார்க்க

## பேச்சிற்கு மூன்றாம் தரப்பு நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

அரசிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தேவையென்ற கூட்டமைப்பிலுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்தை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அரசுடனான பேச்சில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்ற சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்து சிறந்த யோசனையல்லவென நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு தீர்வுத் திட்டத்திலேயே அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த தீர்வுத் திட்டத்தினை ஏற்படுத்தவென அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணைந்து கொள்ள வேண்டும்.

அத்துடன், ஜெனிவா மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான யோசனை காரணமாக தேவையற்ற சர்வதேச தலையீடுகள் ஏற்படுவதைத் தடுக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## சகோதரர்களை மீட்க முயன்ற சிறுமி பலி

(முல்லைத்தீவு)

சகோதரர்கள் இருவர் குளத்திற்குள் மூழ்குவதை அவதானித்து அவர்களை காப்பாற்றச் சென்ற சகோதரி குளத்தில் மூழ்கிய உயிரிழந்த துயரச் சம்பவம் நேற்று மாலை முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை 3 மணியளவில் முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்தில் உள்ள முறிப்புக் குளத்திற்கு தாயும் 3 பிள்ளைகளும் குளிக்கச் சென்றுள்ளனர். கரையில் குளித்துக்

19 ஆம் பக்கம் பார்க்க

## கடும்காற்று, ஆலங்கட்டி மழை வவுனியா முகாம் மக்கள் நிர்க்கதி

(வவுனியா)

வவுனியா செட்டிகுளத்தில் நேற்று மாலை திடீரென வீசிய கடும் காற்று அதனுடன்கூடிய ஆலங்கட்டி மழையால் நலன்புரி நிலையத்தில் வசித்த மக்களின் தற்காலிக வீடுகளின் வலயம் 1 இல் 800 வீடுகளும் வலயம் 0 இல் 280 வீடுகளும் முற்றாக சேதமடைந்ததுடன், 2000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 6.15 மணி தொடக்கம் 6.30 வரையான நேரத்தில் திடீரென கடும்காற்று வீசியது. இதனால் வவுனியா மெனிக்பாம் முகாமிலிருந்த இடம்பெயர்ந்த மக்களின் தற்காலிக வீடுகளின் கூரைத்தகடுகள் பறந்துசென்று தாக்கியதில் பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து ஆலங்கட்டி மழையும் பொழிந்தது.

19 ஆம் பக்கம் பார்க்க

# 'என் கடன்' நூல் வெளியீடும் விருது வழங்கும் நிகழ்வும்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் வே.ஐ. வரதராஜனின் 'என் கடன்' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வும், மூதறிஞர் கவிஞர் வே.ஐயாத்துரை ஞாபகார்த்த 2009 ஆம், 2010 ஆம் ஆண்டு கவிதை நூலுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், இலங்கை இலக்கியப் பேரவை செயலாளர் சி.சிவதாசன் வரவேற்புரையினையும், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் த. கலாமணி நூல் வெளியீட்டுரையினையும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து 'குரல் வழிக் கவிதைகள்' புனைந்த அல் அஸிமத் மற்றும் 'சுவட்டெச்சம்' கவிதை புனைந்த சோ.பத்மநாதன் ஆகியோர்களுக்கான விருதுகளை எழுத்தாளர் தெணியான் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரும் எழுத்தாளருமான இ.இராஜேஸ்கண்ணன், யாழ்.இலக்கிய வட்டச் செயலாளர் இ.கிருபானந்தா மற்றும் யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளர், யாழ்.பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் என ஆர்வலர்கள் எனப்பெருமளவானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## நிர்வாணமாக ஓடிய திருடன்

(வடமராட்சி)

திக்கம் பகுதியில் அதிகாலைவேளை வீடு ஒன்றுக்குள் நுழைந்த இனம்தெரியாத நபர் இளம் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு நிர்வாணமாக ஓடியதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அல்வாய் மேற்கு, திக்கம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தாயும், மகளும் தனியாக வசித்து வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு மேற்படி வீட்டைக் குறிவைத்து இறங்கிய திருடன் பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்ததுடன், அவ்வீட்டில் வசித்து வரும் பெண்ணைச் சிறிய கூரிய கத்தியால் தாக்கிவிட்டுச் சென்றுள்ளான்.

இதேவேளை, குறித்த திருடன் அணிந்திருந்த காற்சட்டையையும் கழற்றிவிட்டு, நிர்வாணமாக ஓடியதாக வீட்டார் தெரிவித்தனர். இது குறித்து பருத்தித்துறை பொலிஸாருக்கு காலை சென்று முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (116)

## மஹா கும்பாபிஷேகம்

(திருநெல்வேலி)

யாழ்.திருநெல்வேலி திருவருள்மிகு ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ காயரோகண சுவாமி தேவஸ்தான புனராவர்தன, அஷ்டபந்தன நலகுண்டபஷ் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அத்த நட்சத்திரமும், பூரணைத் திதியும், அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 8.27 மணி முதல் 10.27 மணிக்குள் வரும் இடபலக்கின சுபவேளையில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். (137)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு குளவி கொட்டியது

(வடமராட்சி)

குளவி கொட்டியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் குடத்தனை மேற்கு வீரபத்திரர் கோவிலடியில் உள்ள வீடு ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ந.ரகுநாதன் (வயது-46), இவரது மனைவி ர.ஜெயலலிதா (வயது-45), இவர்களது மகளான ர.ரம்சிகா (வயது-12) ஆகிய மூவருமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பக்கத்து வீட்டிலிருந்த மாமரம் ஒன்றிலேயே மேற்படி குளவி கூடு கட்டியிருந்தது. இவர்கள் தமது வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்த போது தாயையும், மகளையும் குளவி கொட்டி விட்டு முற் றத்தில் நின்ற கணவரையும் கொட்டிவிட்டுச் சென்றுள்ளது.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் வாழ்ந்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (116)

## போதையில் கையை வெட்டிய குடும்பஸ்தர்

மதுபோதையில் தனது கையைத் தானே போத்தலால் வெட்டிய சம்பவம் குருநகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியில் நேற்று மதியம் 3.30 மணியளவில் அதேஇடத்தைச் சேர்ந்த அ.கீதப்பொன்கலன் (வயது-38) என்ற குடும்பஸ்தரே மதுபோதையில் வீட்டுக்குச் சென்று அங்கு வீட்டாருடன் ஏற்பட்ட தகராற்றில் போத்தலை உடைத்து தனது கையைத் தானே வெட்டியுள்ளார்.

அக்குடும்பஸ்தர் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். (எஸ்)

## சிறு விளம்பரங்கள்


### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1350)

---

### கணினி திருத்தம்

(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1351)




தந்தை செல்வாவின் 114 ஆவது ஜனன தினம் யாழ்ப்பாணத்தில் யாழ்நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் இந்து கலாசார மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், பேராசிரியர் சிற்றம்பலம், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச சபையின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (112)

## நீதிமன்றச் செய்திகள்

### கீரிமலைக்குப் போகுமா காளை மாடு?

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் கொள்வனவு செய்யப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த காளை மாட்டைப் பராமரிப்பதற்கு கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் முன்வந்துள்ளதாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் யாழ்.நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய இனக் காளை மாட்டை ஏலத்தில் கொள்வனவு செய்தவர் காளை மாட்டை இறைச்சிக்காக வெட்ட இருந்தவேளை சமயப் பிரதிநிதிகள், பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் அனுப்பி வைத்ததன் பிரகாரம் காளை மாடு வெட்டுவது தடுக்கப்பட்டது.

மாட்டை வாக்கியவர் இதனை எதிர்த்து நீதிமன்றத்தை நாடிய வேளை அவ்வழக்கினை யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். இந்த விசாரணையின்போது அரச அதிபரை விளக்கமளிக்க வருமாறு பணிப்புரை விடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எஸ்)

### கருக்கலைப்புக்கு உதவியவர் சிறையில்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கருக்கலைப்பு நிலையமொன்றில் கருக்கலைத்த பெண்ணுக்கு உதவி செய்த பெண்ணை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த 41 வயதுடைய பெண்ணுக்கு கருக்கலைப்புச் செய்வதற்கு அந்த நிலையத்தினைக் காண்பித்தது மட்டுமன்றி அழைத்துச் சென்று கருக்கலைப்புச் செய்ய உதவி புரிந்துள்ளார்.

இவரை சிறுவர், பெண்கள் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி நேற்றுக் கைது செய்து யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியவேளை, யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளியை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், பெண்ணுக்கு கருக்கலைப்புச் செய்தவரையும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

### 2500 போத்தல் சாராயம் பதுக்கல் கொக்குவில் வாசி கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதி வீடொன்றில் 2 ஆயிரத்து 500 போத்தல் சாராயத்தினை பதுக்கி வைத்த நபரை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

நேற்று குறித்த நபரையும், 2 ஆயிரத்து 500 போத்தல் சாராயத்தினையும், யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தியவேளை, நீதிமன்றின் தடுப்புக்காவல் உத்தரவின்பேரில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அத்துடன், 2 ஆயிரத்து 500 சாராயப் போத்தல்களும் மன்றில் ஒப்படைக்கப்பட்டதுடன், எதிர்வரும் 20 ஆம் திகதி குறித்த நபரை நீதிமன்றுக்கு ஆஜராகும்படியும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். (எஸ்)

### தூள் வியாபாரிகளுக்கு விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடிப் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட 3 நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவேளை அச்சுவேலியைச் சேர்ந்த நபருக்கு எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்க மறியலும், நாவாந்துறையைச் சேர்ந்த இரண்டு நபர்களுக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலிலும் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (எஸ்)


உ

சிவமயம்

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் [illegible]லிக்குக"

புளியம்பொக்கணை

நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்**

நாகதம்பிரான் பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழன் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு (30.03. 2012) தொடக்கம் 03.04.2012 வரை வட்டக்கட்சி, இராமநாதபுரம், கல்மடு, விசுவமடு, திருவையாறு, பிரபந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலயத் தொண்டர்கள் ஆலய சின்னக் கொடிகளுடன் தண்டல் ஒழுங்குகளுக்காக வருகை தரவுள்ளனர்.

இவ்வண்ணம்

ஆலய பரிபாலனசபை

(C/1345)

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள்.

மகாத்மா காந்தி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## எதை வைத்து இந்த மிரட்டல்?

சிலருக்கு, இந்த உலகில் தாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நிரூபிப்பதற்கு மானசீகமாகவேனும் எதிரிகள் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள் என்றொரு அறிஞர் சொல்லியிருந்ததை நேற்றைய பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தபோது மீண்டும் நினைக்க வேண்டியிருந்தது.

“நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை புறக்கணித்தால் விபரீத விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்” என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்திருப்பதாக அந்தச் செய்திகள் கூறின.

நாடாளுமன்றத்தில் பேசும்போதே அந்த எம்பி இப்படி ஆக்ரோசமாக உறுமியிருக்கிறார். அவர் எதிர்பார்த்தபடியே, பத்திரிகைகளிலும் அந்த கோபாவேசமான எச்சரிக்கை வெளிவந்து, அரசாங்கத்தை அவர் ஒரு மிரட்டு மிரட்டிவிட்டு வந்திருப்பதை தமிழ்மக்கள் அறிந்துகொண்டு புல்லரித்துப்போய் விட்டார்கள். இந்த வீர இறுமாப்பை விட அவர்களுக்கும் வேறென்ன வேண்டும்?

ஆனால், தமிழ் எம்பியின் எச்சரிக்கையால் நடுநடுங்கிப் போயிருக்கும் அரசாங்கத் தரப்பினர் பயத்தில் நித்திரையே வராமல் தவிக்கிறார்களா அல்லது பாதுகாப்பான குழிகள் வெட்டிப் பதுங்கியிருக்கிறார்களா என்ற செய்திகளை இன்னும் ஊடகங்கள் வெளியிடவில்லை. அவர்கள் எதிர்கொள்ளப்போகும் அந்த விபரீத விளைவுகள் அவர்களது கனவுகளில் வந்து மிரட்டுகிறதா என்பது பற்றியும் தகவலில்லை.

ஏனெனில், ஜெனிவாவில் நம்மாட்களும் அமெரிக்காவுமாகச் சேர்ந்து மிரட்டியதில் அரசாங்கம் அரண்டு போயிருப்பதைப் பேசிப் பேசியே இன்னும் தீரவில்லை. அரசாங்கம் ஜெனிவா மாநாட்டைச் சமாளிக்க எத்தனை விமானங்களில் ஆட்களை அனுப்பியது, எத்தனை அமைச்சர்களை அனுப்பியது? அப்படியிருந்தும் அமெரிக்கத் தீர்மானத்தை வெல்ல வைத்து அரசை ஒரு ஆட்டு ஆட்டிய நம்மாட்களின் திறமையை வியந்து வியந்து தீரவில்லை.

இதற்கு முன்னரும், றொபேட் ஓ பிளேக் அமெரிக்காவுக்குப் பேச அழைத்தபோது, அரசாங்கத்திற்கு குலைப்பன் கண்டதாக நாம் புல்லரித்தோம். ஜெயலலிதா சட்டசபையில் ஆக்ரோசமாய் தீர்மானம் நிறைவேற்றிய போதும் அரசாங்கம் நடுநடுங்குவதை எண்ணிக் குதூகலித்தோம்.

அதற்கு முன்னரும், அரசாங்கம் திணறுகிறது, கவிழப் போகிறது, இதோ சர்வதேசச் சிறைக்குப் போகிறது என்றெல்லாம் நாம் பூரிப்பதும் நம்மாட்களின் இராஜதந்திரத்தை எண்ணி இறும்பூதடைவதுமாகக் கூவிக் கூவி இருந்திருக்கிறோம். அரசாங்கமும் அங்கிங்கென எல்லா இடமும் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் அனுப்பி பதில்களைச் சொல்லிவிட்டு, பழையபடி வந்து அரசை நடத்துகிறது.

இன்னமும் அரசின் நிலைமை சிக்கலாகியதாகத் தெரியவில்லை. ஒருவேளை சிக்கலாகினால், சர்வதேசத்துக்கு – இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ, ஐரோப்பாவுக்கோ – என்ன வேண்டும் என்று கேட்டு, அவர்கள் விரும்பியதற்குச் சரி சொல்லிவிட்டால் போதும் அரசாங்கத்தின் சிக்கல் அத்துடன் தீர்ந்துவிடப் போகிறது.

நம்முடைய பிரச்சினை தீரப் போகிறதா என்பதையே இவர்களிடம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். யானையும் கொசுவுமாகச் சேர்ந்து பாலத்தை ஆட்டியது போல் சர்வதேசத்துடன் சேர்ந்து அரசை ஆட்டிக் கொண்டிருப்பது சரி, நம் பிரச்சினைத் தீர்வுக்கு இந்த மிரட்டல்களால் என்ன சாதிக்க முடியும் என்பதைத்தான் இவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். கொசுவின் துணைதானா யானைக்கு வேண்டும்?

வெறுமனே இந்த மிரட்டல்களுக்குப் புல்லரிக்க வைத்தே மக்களை ஏமாற்றி இழுத்தடித்துச் செல்வதை இவர்கள் நிறுத்தியாக வேண்டும்.

– ஆசிரியர்

# போராட்டம் தொடரும் சூளுரைக்கின்றார் ரணில்

(கொழும்பு)

வறிய மக்கள் மீது வரிச்சுமைகளை அதிகரித்தும் செல்வந்தர்களுக்கு வரிச்சலுகையை வழங்கி வரும் இந்த ஆட்சியை அகற்றும் வரை எமது போராட்டம் தொடரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தியவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புக் காரணமாக தமிழ், சிங்கள புத்தாண்டை மக்கள மகிழ்ச்சியாக கொண்டாடக் கூடிய சூழ்நிலையை இந்த அரசாங்கம் தடுத்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொருட்கள சேவைகளின் விலைகள் கடுமையாக உயர்வடைந்துள்ளதாகவும் இதனால் மக்கள் புத்தாண்டை மகிழ்ச்சியாக கொண்டாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வறிய மக்கள் மீது வரிச்சுமையை அதிகரிக்கும் அரசாங்கம், செல்வந்தர்களுக்கு வரிச் சலுகை வழங்கி வருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதனைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது எனவே இந்த அரசை அகற்றும் வரை நாடு முழுவதிலும் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடத்தப படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆசியாவில் எட்டாம் இடம் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு

(கொழும்பு)

ஆசிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்திப் பார்க்கும் போது கொழும்புப் பல்கலைக்கழகம் எட்டாவது இடத்திற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அதுபோல பேராதனை, ரஜரட்டை, களனி, சிறி ஜயவர்த்தனபுர மற்றும் நாவல ஆகிய பல்கலைகழகங்கள் கடந்த 2011ஆம் வருடத்துடன் ஒப்பிடும் போது 2012ஆம் வருடம் பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் றுகுணு பல்கலைக்கழகம் தரப்படுத்தலில் வீழ்ச்சியைக் கண்டுள்ளதாகவும் அதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் மாணவர் சங்கம் அங்கு இயங்கி வருகின்றமையே காரணம் எனவும் உயர் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இணுவில் பொது நூலகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா

(இணுவில்)

இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு பெது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் க.ஜனார்த்தனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளர் எம்.ஜெகூ, சிறப்பு விருந்தினராக பிரபல தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரட்ணம், கௌரவ விருந்தினராக சோ.பொன்னம்பலம், ச.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய பிரதம குரு வை.சோமாஸ்கந்தக் குருக்கள், தொடக்கவுரையை யாழ்.பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பீட பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நூலகர், உதவி நூலகர் கௌரவிப்பும், முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## உள்ளூர் கையுறையால் சத்திர சிகிச்சை

(கொழும்பு)

சத்திரசிகிச்சைக்கான கையுறைகளை உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து மாத்திரமே கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மருந்துகள், சத்திரசிகிச்சைக்கான உபகரணங்கள் மற்றும் இரசாயன ஆய்வுகூடத்திற்கான உபகரணங்கள் என்பவற்றை கொள்வனவு செய்யும் வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் சிபாரிசின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளுக்கான கையுறை கொள்வனவிற்காக வருடாந்தம் ஒரு பில்லியன் ரூபா செலவாவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. எனினும் இரண்டு உள்ளூர் உற்பத்தி தொழிற்சாலைகளினால் நீண்டகாலமாக கையுறைகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், அவற்றை அந்த நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து கையுறைகளை கொள்வனவு செய்வதால் பெருமளவு அந்நியச் செலவாணி மீதப்படுத்தப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

## மரம் விழுந்ததால் தாயும் குழந்தையும் பலி

(தெரணியகல)

அவிசாவளை - தெரணியகல - ரஸ்னகந்த பகுதியில் கித்துல் மரம் வெட்டிக் கொண்டிருந்த வேளை, வெட்டப்பட்ட மரம் மற்றுமொரு மரத்துடன் மோதி அருகில் இருந்த வீட்டின் மேல் விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்த 48 வயதுப் பெண்ணும் ஒன்பதரை மாதக் குழந்தையும் உயிரிழந்துள்ளனர்.

48 வயதுப் பெண் தெரணியகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்த நிலையில், கைக்குழந்தை தெரணியகல, கரவனெல்ல ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு பின் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து தெரணியகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏகாதசி திருவிழா

(குருநகர்)

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஏகாதசி விரத பூசையும் 5ஆம் திகதி வியாழக்கிழமை பங்குனி உத்தர பூசையும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

இருதினங்களிலும் காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் தொடங்கும். 9 மணிக்கு சமயச் சொற்பொழிவும் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயணர், பூமாதேவி, ஸ்ரீதேவி சகிதராய் விசேட தண்டிகையில் திருவீதி எழுந்தருள்வார். மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (68)

## சிகிச்சைக்கு சென்றபோது பாலியல் இம்சையென முறையீடு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகமொன்றைச் சேர்ந்த பெண்ணொருவர் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காகச் சென்றபோது வைத்தியரினால் பாலியல் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறுமாறு கொள்ளுபிட்டிய பொலிஸாருக்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இது தொடர்பான வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மேற்படி வைத்தியர் கைது செய்யப்பட வேண்டுமா என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவ்வைத்தியர், மருத்துவ தேவைக்காக அவ்வாறு நடந்துகொண்டாரா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கையில் ஏற்பட்ட நோவிற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள தனியார் மருத்துவமனையொன்றை நாடியபோது வைத்தியர் ஒருவர் தன்னை பாலியல் தொந்தரவுக்குட்படுத்தியதாக அப்பெண் கொள்ளுப்பிட்டி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# சமுர்த்தி நிவாரண உதவிகளை கூட்டுறவுச் சங்கங்களே வழங்க வேண்டும்

## தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் பந்து ரணவக்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பல.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளைத் தொடர்ந்தும் சங்கங்கள் மூலமே வழங்க வேண்டும் என இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் பந்து ரணவக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளா.

பல.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண உதவிகளை சங்கங்களிலிருந்து நீக்கும் திட்டம் தொடர்பாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கணிசமான பங்களிப்பைச் செய்துவரும் கூட்டுறவு நிறுவனங்கள் கிராமிய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் கடந்த காலங்களில் முனைப்புடன் பணியாற்றி வந்துள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள 306 பல.நோ.கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றில் 8 ஆயிரம் கிளை விற்பனை நிலையங்களும் மற்றும் 390 கூட்டுறவு நகரங்களும் கூட்டுறவு இயக்க வலையமைப்புக்குள் உள்ளன.

யுத்த காலங்களில் நுகர்ச்சிப் பொருள்களை மக்களுக்கு விநியோகிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களையே அரசாங்கங்கள் பயன்படுத்தி வந்தன. இந்நிலையில் தற்போது சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண உதவிகளைத் தொடர்ந்தும் அவற்றின் மூலமே விநியோகிக்க வேண்டும் எனவும் இவ் விநியோகத்தின் போது சங்கங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் குறைபாடுகள் உள்ள சங்கங்களை இத்திட்டத்தில் இருந்து நீக்குவதற்கு ஆட்சேபனை இல்லை எனவும் வெற்றிகரமாக செயற்படுத்தும் சங்கங்களை இத்திட்டத்திலிருந்து நீக்க வேண்டாம் எனவும் அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்தார்.

# தவிசாளரின் அசமந்தப்போக்கு; அபிவிருத்திப் பணிகள் பின்னடைவு

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளரின் அசமந்தப் போக்கினால் சபையின் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படுவதாகவும், அபிவிருத்தி சம்பந்தமான தீர்மானங்களை நிறைவேற்ற முடியாதுள்ளதாகவும் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வ.ச. இராசலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இது சம்பந்தமான முறைப்பாட்டை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தும் எந்தவித காரணமும் இன்றி கூட்டத்தை நடத்தாமை, பூநகரிப் பிரதேச சபையினால் அரச நிதியில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் திறப்பு விழாவுக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டு தன் இஷ்டப்படி நிகழ்வை இரத்துச் செய்தமை போன்ற செயற்பாடுகளால் பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைகளில் பாரிய பின்னடைவு ஏற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இம்முறைப்பாட்டுக் கடிதம் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, உள்ளூராட்சி அமைச்சு, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், பூநகரிப் பிரதேச செயலாளர், பூநகரி பொலிஸ் அதிபர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (112)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு சித்திரப்போட்டி

(வலிகாமம்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இவ்வருடம் மத்திய சுற்றாடல் அதிகார சபை நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே சுற்றாடல் சார் கார்ட்டூன் சித்திரப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இலங்கையின் சுற்றாடல் பராமரிப்பு முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டுக்காக சுற்றாடல் நேயமுற்ற சந்ததியைக் கட்டியெழுப்பும் நோக்குடன் இப்போட்டி நடத்தப்படவுள்ளதுடன், தரம் 9 - 11 வரை ஒரு பிரிவாகவும், தரம் 12-13 வரை மற்றைய பிரிவாகவும் 2 பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

. ஆக்கங்கள் சூழற்தொகுதியின் பாதுகாப்பு, சுற்றாடல் அபிவிருத்தி, மனிதனும் பசுமைப பொருளாதாரமும், மனித நடவடிக்கையும் காலநிலை மாற்றமும், திண்மக் கழிவு முகாமைத்துவமும் மீள்சுழற்சியும் முதலான கருப்பொருளை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

ஆக்கங்களை சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகர்ர சபை, இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டிகள் மாவட்ட, தேசிய மட்டத்திலும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## நிர்வாகத் தெரிவு

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பாடசாலையின் பொதுக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக வை.இராசரத்தினம், உபதலைவராக கு.மகாலிங்கம், செயலாளராக த.நிரோத், உப செயலாளராக சி.மதீஸ்வரன், பொருளாளராக திருமதி ம.கீர்த்திநாதன் ஆகியோருடன் 6 நிர்வாக சபை உறுப்பினர்களுடன் ஆலோசகராக திருமதி முகுந்தன் ஆகியோா தெரிவு செய்யப்பட்டனர். (11)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

நெடுந்தீவுப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு செ[illegible]லக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டம் ஈ.பி.டி.பி.யின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுபபினரும் நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது. (69)




அச்சுவேலி வடக்கு அருள்மிகு சரசாளி சித்திரவேலாயுதர் ஆலய ஆரம்பகாலப் பூசகரும் உரிமையாளருமாகிய வெள்ளையன் குழந்தை ஐயா ஞாபகார்த்த மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் அடிக்கல் நாட்டுவதையும், விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## கிடைத்தது முத்திரை கிடைக்கவில்லை எரிபொருள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம மக்களுக்கு சமுர்த்தி எரிபொருள் முத்திரை வழங்கப்பட்டும் மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் எரிபொருள் முத்திரை வழங்கப்பட்டு ஒருமாதம் கடந்துள்ள நிலையில் தாம் நாளாந்தம் மண்ணெண்ணெய் பெறுவதற்கு ப.நோ.கூ. சங்கங்களுக்குச் சென்று இல்லையெனத் திரும்பி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சங்கங்கள் தமக்கு மண்ணெண்ணெய் வந்து சேரவில்லை. வந்தவுடன் வழங்கப்படும எனத் தெரிவிப்பதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு எரிபொருள் முக்கியமாகக் காணப்படுவதால் தமக்கான எரிபொருளை விரைவில் பெற்றுத்தருமாறு பயனாளிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக் கொள்கின்றனர். (77)

### உரும்பிராய் சிறுமி மீதான வல்லுறவு

# கோட்டக் கல்வி அதிகாரிக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சிறுவர் பராமரிப்பு இல்லச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளரை பிணையில் செல்ல யாழ்.நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

குறித்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்ட மா அதிபரின் சார்பாக ஆஜராகிய யாழ்.மேல் நீதிமன்ற சட்டத்தரணி வி.திருக்குமரன் பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

சந்தேக நபர் சார்பாக ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணிகள் என்.ஸ்ரீகாந்தா மற்றும் எம்.றெமிடியஸ் கடுமையாக ஆட்சேபித்தனர்.

இருதரப்பு சட்டத்தரணிகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையையும், பொலிஸாரினால் விசாரணை மேற்கொண்ட அறிக்கையையும் யாழ்.நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்படி இவ்வழக்கில் சட்ட மா அதிபர் தலையிட முடியாது என சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா வாதாடினார்.

இருதரப்பின் சூடான வாதவிவாதகங்களின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பிணை மனுத் தொடர்பாக கருத்துரைத்த போது பிணை வழங்குவது விதியாகவும், பிணை மறுப்பது விதிவிலக்காகவும் கொள்ளப்பட வேண்டும். பிணை சட்டத்தில் கொள்ளப்படும் கோட்பாடு ஆகும்.

எனவே சந்ததேக நபர் இருதய நோயாளி என்றாலும் 30 வயதுடைய மனநோயுடைய பெண்ணைப் பராமரிக்க வேண்டிய கடமை உண்டு என்ற நிலையில் மன்றில் உள்ள சகல விடயமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்ட பின் சந்தேக நபருக்குப் பிணை உத்தரவு வழங்குவதாகத் தெரிவித்த நீதிபதி 3 இலட்சம் பெறுமதியான 3 ஆட்பிணையிலும், 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், பிணையாளிகள் இருவரும் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதுடன் கடவுச்சீட்டை உரிய பதிவாளரிடம் ஒப்படைக்குமாறும், வெளிநாட்டுக்குச் செல்லத் தடைவிதித்து பிணை வழங்கினார்.

அத்துடன் பிணையாளிகளுடன் தகராறிற்கு செல்லக்கூடாது எனவும், அவ்வாறு செல்வதாகத் தகவல் கிடைக்குமிடத்து பிடித்துபிணை இரத்துச் செய்யப்படும் எனவும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார். (எஸ்)

## உதவித் திட்டத்திற்குத் தெரிவு

சமூகசேவை அமைச்சினால் முதியவர்களுக்கு வழங்கப்படும் உதவித் திட்டத்திற்கு பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 70 வயதைச் சேர்ந்தவர்களில் 79 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இச்சபையினால் முதியவர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளவே மேற்படி 79 பேர் தெரிவாகியுள்ளதுடன் இவர்களுக்கு இச்சபையினால் மாதாந்தம் 1000 ரூபா ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருவதாக சமூகசேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (116)

## புகையிரத நிலைய நிர்மாணப் பணிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மீசாலை புகையிரத நிலையங்களும், புகையிரதப் பாதைகளும் புதிதாக நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புகையிரதத் திணைக்களத்தின் ஊடாக புகையிரத நிலைய மற்றும் பாதை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கு தென்னிலங்கையிலிருந்து பாரிய வாகனங்கள் மூலம் கட்டடப் பொருட்கள், இரும்புத் தண்டவாளங்கள் எனபன எடுத்து வரப்பட்டுள்ளதுடன் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வளலாய் ஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

. காலை 10 மணிக்கு அபிசேக ஆராதனையுடன் உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுவதுடன் மாலை வைரவப் பெருமான் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (02)

# 85 வீதமான மாணவர்கள் பற்சூத்தையால் பாதிப்பு

## யாழ்.பிராந்திய பல் மருத்துவர் பாலகுமார்

(சாவகச்சேரி)

இலங்கையில் பற்சூத்தையில் யாழ்.மாவட்ட மாணவர்களே தற்போது கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு முன்பள்ளி மாணவர்களிடையேயும், பெற்றோர்களிடையேயும் பற்சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று யாழ்.பிராந்திய பல் மருத்துவர் எஸ்.பாலகுமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பாடசாலையில் நடைபெற்ற பற்சுகாதார செயற்பாட்டுக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பெற்றோர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்.மாவட்டத்தில் 85 வீதமான மாணவர்கள் பற்சூத்தையால் பாதிக்கப்பட்டுள்ளமை கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு சரியான முறையில் பற்சுகாதாரம் பேணப்படாமையே காரணம்.

மாணவர்கள் பற்தூரிகையில் பற்பசை எடுத்து தண்ணீரில் நனைக்காது எல்லாப்பற்களிலும் பற்பசை படக்கூடியவாறு பல் துலக்கவேண்டும். அத்துடன் ஒருமுறை மட்டுமே வாய் கொப்பளித்தல் வேண்டும். அத்துடன் பற்தூரிகையை பாதுகாப்பான இடத்தில் வைக்கவேண்டும்.

இவ்வாறு செயற்பட்டால் பற்சூத்தையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இதை விட இனிப்புப் பதார்த்தங்களுக்கு பதிலாக பனிக்கட்டியை பயன்படுத்துவதுடன் சோடா, ஐஸ்கிறீம் ஆகிய இனிப்புப் பதார்த்தங்களை பாவிப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்விடயத்தில் பெற்றோர்களும் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (11)



காரைநகர் - திக்கரை திருச்செந்தூர் முன்பள்ளிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் ஈ.பி.டி.பியின் காரைநகர் அமைப்பாளரும், காரைநகர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான வி.கண்ணன் முன்பள்ளி சமூகத்திடம் தளபாடங்களை கையளிப்பதை காணலாம்.

## கட்டாக்காலிகளின் தீராத தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐந்து சந்தி, மானிப்பாய் வீதி பகுதிகளில் கட்டாக்காலி ஆடுகளினால் பெருமளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இப்பகுதிகளிலுள்ள கடைகள், வீடுகளில் அனுமதியின்றி இவை உட்சென்று பொருட்களைச் சேதப்படுத்துகின்றன.

வீடுகளிலுள்ள பெறுமதிமிக்க மரங்களையும், செடிகளையும் நாசப்படுத்துகின்றன.

தினமும் காலை வேளையிலிருந்து மாலை வரை இவ்ஆடுகளினால் பெரும் தொல்லையாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு திரியும் ஆடுகள் மீது மாநகரசபையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனரர். (105)



பருத்தித்துறை அருள்மிகு மந்திகை கண்ணகை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தின் போது சிவஸ்ரீ சதா.மகாலிங்க சிவக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரிகைகள் நடைபெறுவதை காணலாம். (01)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிவிருத்தித் திட்டம் 2012ஆம் ஆண்டிற்கான கல்வி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் கூட்டுறவு சபை தலைவர் இ.இராஜராம் தலைமையில் நடைபெறவுள்ள இம் மாதாந்தக் கலந்துரையாடலில் கூட்டுறவு சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதுடன் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மேற்கொள்ளவுள்ள கல்வி நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் தெரிவித்தார். (எஸ்)

## முகாமைத்துவ அலுவலர்களுக்கு புகுமுகப்பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினூடாக புதிதாக நியமனம் பெற்றவர்கள் பொது முகாமைத்துவ உதவியாளர் பயிற்சிக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி அமைச்சின் ஊடாக 01.04.2012 இற்குப்பின்னர் புதிதாக நியமனம் பெற்ற பொது முகாமைத்துவ அலுவலர்களில் புகுமுகப் பயிற்சியை இதுவரை பெற்றுக்கொள்ளாத மற்றும் தமது திணைக்களத்தலைவரின் ஊடாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள புதிய பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிநெறிக்கு பதிவுகளை மேற்கொள்ளாத புதிதாக தெரிவு செய்யப்பட்ட பொது முகாமைத்துவ உதவியாளர் அனைவருக்கும் நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் தங்களது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியவட்டம் நடத்தும் சமய சமூகப்பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் ஆ.தியாகராசாவுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய அறங்காவலர் சபை பரம்பரை உறுப்பினரும் தலைவரும் ஓய்வு பெற்ற அரசாங்க அதிபருமாகிய ஆ.தியாகராசாவுக்கு அம்பிகை அருளாளன் என்ற பட்டம் வழங்கப்படவுள்ளது.

## அதிபர்களுக்கான செயலமர்வு

(வடமராட்சி)

கரவெட்டி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான துரித கற்றல் செயற்றிட்ட செயலமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி சி.நற்குணலிங்கம் தலைமையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வு தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கானது. இழந்த கல்வியை மீளப்பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறிப்பாக யுத்தத்தினாலும், இயற்கையனர்த்தங்களாலும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு பின் தங்கிய நிலையில் உள்ள மாணவர்களின் கல்வியை எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பாக இச் செயலமர்வு நடைபெறவுள்ளது. (116)

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சங்கானை வர்த்தகர் நடாத்தும் கலைவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி சங்கானை கூடத்து அம்மன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி மற்றும் மைதானத்திற்குட்பட்ட போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

## முரசின் இன்றைய பலன்

(01.04.2012 -ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் பங்குனி 19 ஆம் திகதி. நவமி முற்பகல் 9.46 வரை. நட்சத்திரம் புனர்பூசம் பின்னிரவு 5.35 வரை. சித்தயோகம். கரிநாள்.
இராகுகாலம் 4.41 - 6.11 வரை. சுபநேரம் 9.11 - 10.41 வரை.
எமகண்டம் 12.11 - 1.41 வரை. குளிகைகாலம் 3.11 - 4.41 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நல்ல தகவல், கடன்படல், தொழிலில் மேன்மை, அரச அனுகூலம் கிட்டும். |
| ரிஷபம் | பணவரவு, அனுசரித்துப் போகவும், கனவுகள் நனவாகும், கடன்கள் நிவர்த்தியாகும். |
| மிதுனம் | ஜீவன மேன்மை, பணப்பரிமாற்றத்தில் கவனம், மங்களகரமான தினம், நிதானம் நன்று. |
| கடகம் | அலைச்சல், முற்கோபம் தவிர்க்கவும், வாக்குவாதம், நெருக்கமானவர்களினால்பிரச்சினை. |
| சிம்மம் | நற்செய்தி, பூர்வீகச் சொத்தில் வில்லங்கம், வேலைப்பளு அதிகரிக்கும், புத்திர பாக்கியம். |
| கன்னி | பணவரவுகள், குடும்பத்தில் நல்லுறவு, எதிர்பாராத செலவுகள், கல்வியில் பின்னடைவு. |
| துலாம் | சாதனை தினம், குடும்பத்தில் மனஸ்தாபம், தெய்வ வழிபாடுகள், சகோதரவழியால் இன்னல். |
| விருச்சிகம் | கடின உழைப்பு, சேமிப்பு கை கொடுத்துதவும், உறவினர் ஒத்தாசை, திடீர் பயணம். |
| தனுசு | சுபகாரியங்களில் ஈடுபாடு, குடும்பத்தில் தன்னிறைவு, கொடுக்கல் வாங்கலில் கெடுபிடி. |
| மகரம் | பொருள் வரவு, வெளியூர் பயணம், அரச உதவி கிட்டும், குடும்பத்தில் அதிருப்தி. |
| கும்பம் | சந்திராட்டமம், பயணம் தவிர், ஆடம்பரச் செலவு, அகால போசனம், உறவினர் உதவி. |
| மீனம் | நல்வாக்கு, பணப்பற்றாக்குறை, தொலைதூர இடமாற்றம், அந்நியரால் போட்டி. |

## தங்கூசி வலைகளுக்குத் தடை; மீறுவோர்மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மாதகல் மற்றும் சாவற்காட்டு கடற்பகுதிகளில் சில கடற்தொழிலாளர்களினால் கடற்தொழில் நடவடிக்கைகளுக்கு தடைசெய்யப்பட்டிருக்கும் தங்கூசி வலைகள் பாவிக்கப்படுவதாக தமக்கு முறைப்பாடு கிடைத்திருப்பதாக யாழ்.மாவட்ட கடற்தொழில நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அண்மை நாட்களாக இவ்வாறு குறித்த கடற்பகுதிகளில் சட்டவிரோத நடவடிக்கைகளில் கடற்தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளமை தொடர்பாக தாம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசாங்கத்தினால் கடற்தொழில் நடவடிக்கைகளுக்கு தடைசெய்யப்பட்டிருக்கும் உபகரணங்களில் தங்கூசி வலையும் அடங்குகின்றது. இதன் காரணமாக கடந்த மாதங்களில் யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளால் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகள் மூலம் தங்கூசி வலைகள் பல இடங்களிலிருந்து கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன. அத்துடன் அவ்வாறான வலை விற்பனை நிலையங்களில் இவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன. இருந்தும், மீண்டும் சில கடற்தொழிலாளர்கள் அதனைப்பயன்படுத்துவது குறித்து முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த திணைக்களம விரைவில் நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# ஜோகோவிச், முர்ரே இறுதியில் மோதல்



(மியாமி)

அமெரிக்காவின் மியாமியில் இடம்பெற்றுவரும் மியாமி மாஸ்டர்ஸ் டென்னிஸ் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் உலகின் முதல்நிலை வீரர் நொவாக் ஜோகோவிச் மற்றும் நான்காம் நிலை வீரரான பிரித்தானியாவின் அன்டி முரே ஆகியோர் மோதவுள்ளனர்.

உலகின் 21ஆம் நிலை வீரர் ஜுவான் மொனாக்கோ மற்றும் ஜோகோவிச் ஆகியோரிடையே இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் ஜோகோவிச் 6-0, 7-6 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். முன்னதாக, அன்டி முரே மற்றும் ஸ்பெயினின் நடால் ஆகியோரிடையே இடம்பெறவிருந்த அரையிறுதிப்போட்டியில் நடால் விலகிக்கொள்ள முர்ரே இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

# "சார்க்" பெருமை எமக்கு வேண்டும்

(கொழும்பு)

தனியாள் நிகழ்ச்சி நிரல்களை ஒதுக்கி வைத்துவிட்டு "சார்க்" விளையாட்டில் இலங்கைக்கு பெருமை சேர்க்க விளையாட்டுச் சங்க அதிகாரிகள் ஒன்றுபட வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கேட்டுள்ளார்.

ஒப்ரேஷன் சார்க் விசேட பிரிவு ஒன்றை அமைச்சர் திறந்து வைத்துப் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

சார்க் 2013 விளையாட்டு விழாவில் அதிகமான பதக்கங்களை வெற்றி கொள்வதே இப்பிரிவின் நோக்கமாகும்.

இந்தியாவுக்கு சவாலாக சார்க் போட்டியில் பங்குபற்ற கிராமப்புறங்களில் இருந்து விளையாட்டுத் துறையினர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான முறையான பயிற்சிகள் மே மாதம் முதல் ஆரம்பமாகும்.

தெற்கு ஆசிய பிராந்தியத்தில் இரண்டாவதுவிளையாட்டு நாடாக மாறுவதே எமது இலக்காகும்.

விளையாட்டுப் பயிற்சிக்காக வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் வரவழைக்கப்படுவர். பயிற்சிகளை ஆரம்பிக்க இந்தப் பயிற்சியாளர்கள் விரைவில் இலங்கை வருவாரென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களுக்கும் 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களுக்கும் ஒரு டாக்டரும், உடலைத் தகுதியாக வைத்திருப்பதற்கு உதவும் ஒருவரும் நியமிக்கப்படுவர். இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன உட்பட அநேகர் பங்குபற்றினர்.

# மத்தியூஸ் ரெடி

(கொழும்பு)

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கான உடற்தகுதியை அஞ்சலோ மத்தியூஸ் பெற்றுள்ளார்.

எனினும் குறித்த போட்டியில் அவர் பந்துவீசமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கடந்தபோட்டியில் பிரகாசிக்கத் தவறிய சமர சில்வா அடுத்த போட்டிக்கான இலங்கை அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.சானக்க வெலகெதர கடந்தபோட்டியில் உபாதைக்குள்ளாதை அடுத்து அவருக்குப்பதிலாக சமிந்த எரங்க அணியில் இணைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி முன்னிலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோதல் இல்லை



(பெங்களூர்)

டெண்டுல்கருக்கும் எனக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாகக் கூறுவது முட்டாள்தனமானது. எங்களுக்கிடையே எந்தவித மான கருத்து வேறுபாடும் கிடையாது என ராகுல் ராவிட் தெரிவித்தார்.

டாக்டரின் ஆலோசனைக்காக லண்டன் செல்வது பற்றி என்னிடம் கூறிய சச்சின், கிரிக்கெட் சபை ஏற்பாடுசெய்திருந்த பாராட்டு விழாவில் பங்கேற்க முடியாத சூழ்நிலைக்காக வருத்தம் தெரிவித்தார். அவர் முழு உடல் தகுதி பெறுவதுதான் இப்போது மிகவும் முக்கியம். கிரிக்கெட் அவருக்காக காத்திருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்கா வெற்றி

(ஜோகனஸ்பேர்க்)

இந்திய அணிக்கெதிரான ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் டக்வத் லூயிஸ் அடிப்படையில் 11 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றுள்ளது.

முதலில் தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் நான்கு விக்கெட் இழப்பிற்கு 219 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கொலின் இங்ரம் 78 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய இந்திய அணி 7.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 71 ஓட்டங்களைப் பெற்றிருந்த . போது மழை குறுக்கிட்டது.

ஜொஹனர்ஸ் பேர்க்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மழை தொடர்ந்தும் நீடித்ததை அடுத்து டக்வத் லூயிஸ் அடிப்படையில் போட்டியின் வெற்றி தென்னாபிரிக்க அணிக்கு வழங்கப்பட்டது.

இந்திய அணிசார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான கௌதம் கம்பீர் 49 ஓட்டங்களையும் ரொபின் உத்தப்பா 18 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க வீரர் கொலின் இங்ரம் தெரிவு செய்யப்பட்டார்.

# காயத்தால் விலகல்



(கொழும்பு)

இலங்கை அணி யுடனான இரண்டாவது டெஸ்டில் இருந்து இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவட் புரோட் காயம் காரணமாக விலகி உள்ளார்.

காலி மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டின்போது அவர் வலது காலில் காயம் அடைந்தார். இரண்டாவது டெஸ்ட் கொழும்பு மைதானத்தில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், காயம் குணமடையாததால் தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்தார். அவர் உடனடியாக திரும்புகிறார்.

# போத்தா விடுவிப்பு

இலங்கையில் இவ்வருட இறுதியில் இடம்பெறவுள்ள ருவென்ரி 20 உலகக்கிண்ணத்தின் பின்னர் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்திலிருந்து தென்னாபிரிக்காவின் ஜொகன் போத்தா விடுவிக்கப்படவுள்ளார். தெற்கு அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியை வழி நடத்தும் பொறுப்பு ஜொகன் போத்தாவிற்கு வழங்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெற்கு அவுஸ்ரேலியாவின் அடுத்த பருவ காலத்திற்கான அணித்தலைவராக ஜொகன் போத்தா செயற்படவுள்ளார். இதுவரை காலமும் தெற்கு அவுஸ்ரேலியாவின் அணித்தலைவராகக் காணப்பட்ட மைக்கல் கிளிங்கரையே ஜொகன் போத்தா மாற்றீடு செய்யவுள்ளார்.

கடந்த இரண்டு பருவகாலங்களாக தெற்கு அவுஸ்ரேலியாவின் அணித்தலைவராகக் காணப்பட்ட மைக்கல் கிளிங்கர், மூன்று வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் சிறப்பாகப் பிரகாசித்ததோடு, தெற்கு அவுஸ்திரேலியாவின் வரலாற்றில் 25 வருடங்களுக்குப் பின் ஒருநாள் போட்டிகளில் அவ்வணி சம்பியனாக அணித் தலைமைப் பொறுப்பை வகித்திருந்தார். எனினும் நான்கு நாள் போட்டிகளில் அவ்வணி காட்டிய மோசமான பெறுபேறுகளை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜொகன் போத்தாவை ஒப்பந்தத்திலிருந்து விடுவிப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் தற்காலிக பிரதம நிறைவேற்று அதிகாரி ஜக்ஸ் ஃபோல், அவுஸ்ரேலிய உள்ளூர் அணியொன்றைத் தலைமை தாங்கும் வாய்ப்பு தவறமுடியாத ஒன்று என்பதன் காரணமாக அவரை ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்க முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவித்தார். எனினும் ஜொகன் போத்தா சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவில்லை என்பதை தெளிவுபடுத்திய அவர், நீண்ட கால நோக்கில் அவர் தென்னாபிரிக்க அணிக்காக விளையாட அர்ப்பணிப்புடன் உள்ளதாகத் தெரிவித்தார்.

தனது முடிவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஜொகன் போத்தா, நீண்ட கால நோக்கில் தென்னாபிரிக்க அணிக்காக அர்ப்பணிப்புடன்காணப்படுவதாகவும், எனினும் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் திரும்பிப் பார்க்கும் போது இவ்வாய்ப்பை இழந்துவிட்டேன் என நினைத்துப் பார்க்க விரும்பவில்லை எனவும் தெரிவித்தார். இந்த முடிவுக்கான காரணம் கிரிக்கெட் சார்ந்தது எனத் தெரிவித்த அவர், பணம் அதற்கான காரணம் கிடையாது எனத் தெரிவித்தார்.

ஓர் ஒப்பந்த வீரராகத் தனக்குக் கிடைக்கப் பெறும் பணத்தை விட புதிய தெற்கு அவுஸ்ரேலிய அணித்தலைமைப் பொறுப்பின் காரணமாக கிடைக்கப்பெறும் பணம் குறைவானதே எனவும் அவர் தெரிவித்தார்.

# தொடர் சமநிலை




அவுஸ்ரேலிய மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் சமநிலையில் நிறைவுபெற்றுள்ளது.

பாபடோஸில் நடைபெற்ற தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் டுவைய்ன் ஸ்மித் 63ஓட்டங்களைப் பெற்றதுடன், ஜோன்சன் சார்ள்ஸ் 37 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பிரட் லீ மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 161 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் டேவிட் வோனர் 58 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஜோர்ஜ் பெய்லி 24 ஓட்டங்களைப்பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மார்லன் சாமுவேல்ஸ் மற்றும் பிடெல் எட்வேட்ஸ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக டுவைய்ன் ஸ்மித்தும், தொடரின்சிறப்பாட்டக்காரராக ஷேன் வட்சனும் தெரிவானார்கள்.

முதல் போட்டியில் அவுஸ்ரேலிய அணி வெற்றி பெற்றது.

# மழையே காரணம்

தென்னாபிரிக்கா அணியுடனான ருவென்ரி 20 போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு மழையே முக்கிய காரணம். ஆரம்பம் எமக்குச் சிறப்பானதாக அமைந்திருந்தது என இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்தார்.

# 3ஆம் உலகப் போருக்கு முன்னுரை



**ரஷ்யா** தலைமையில் சோவியத் யூனியன்1922இல் உருவானதும்,உலக நாடுகள் 2 அணிகளாகப் பிரியத் தொடங்கின. சோவியத் யூனியன் தலைமையில் ஒரு அணி, அமெரிக்கா தலைமையில் இன்னொரு அணி.

'இது தவிர, இந்த இரு அணிகளையும் சாராமல், பிரச்சினைகளின் அடிப்படையில் அவ்வப்போது இந்த இரண்டில் ஏதாவது ஒரு அணியை ஆதரித்த சில நாடுகள் தனித்து இயங்கி வந்தன. இப்படிப்பட்ட நாடுகள், 1961இல் "அணிசேரா நாடுகள்" என்ற புது அணியாக மாறின.இந்த 3ஆவது அணியை உருவாக்கியதில் அப்போதைய யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ, இந்தியப் பிரதமர் நேரு, எகிப்து அதிபர் நாசர், இந்தோனேஷியப் பிரதமர் சுகர்ணோ, கானா அதிபர் குவாமே என்க்ருமா ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

1991இல் சோவியத் யூனியன் பல நாடுகளாகச் சிதறியது. இதன் விளைவுகள்?

1. சோவியத் யூனியன் தலைமையிலான அணி சிதறியது;

2. அமெரிக்கா தலைமையிலான அணி விரிவடைந்து, அமெரிக்காவின் சர்வதேச அரசியல் பொருளாதார முக்கியத்துவம் அதிகரித்தது;

3. அணிசேரா நாடுகளின் சர்வதேச முக்கியத்துவம் குறைந்தது.

இந்த 3 விளைவுகளை விட மிக முக்கியமான 4ஆவது விளைவு:சோவியத் யூனியன் சிதறியதால் உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்ப, சீனா அசுர வேகத்தில் நேரடியாகவும் மறை முகமாகவும் பல முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தது!

சீனாவின் இந்தப் பாய்ச்சலை, அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. நெருக்கம், ஒதுங்கல், எதிர்ப்பு என மூன்று வித மான அணுகு முறைகளையும் பயன்படுத்தி, சீனாவைக் கட்டுப்படுத்தி வைக்க அமெரிக்க கூட்டணி நாடுகள் தீவிரமாக முயற்சித்து வருகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் -

அமெரிக்கா, உலகின் நம்பர் 1 நாடு என்ற அந்தஸ்தைத் தக்க வைக்கப் போராடிக் கொண்டிருக்கிறது சீனா, உலகின் நம்பர் 1 நாடு என்ற அந்தஸ்தைக் கைப்பற்ற போராடிக் கொண்டிருக்கிறது.

இந்த போராட்டங்கள்தான், இந்த இரு நாடுகள் இடையில் நடந்துவரும் பனிப்போரின் பின்னணி. இந்த பனிப்போர், நேரடியாகவும் மறைமுகமாகவும் பல நாடுகளில் சாதகங்களையும் பாதகங்களையும் ஏற்படுத்தி வருகின்றன!

**இலங்கையுடன் சீனா திடீர்நெருக்கத்தை வளர்த்தது ஏன்?**

முதல் காரணம்: சீனாவைப் போல், இந்தியாவும் மிகப்பெரிய நாடு. ஆசிய அரசியலில் சீனாவின் ஏகாதிபத்தியம் ஏற்படுவதற்கு, இந்தியா ஒரு தடைக்கல்லாக இருந்து வருகிறது.

2ஆவது காரணம் : அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் இந்தியா நெருக்கமாக இருந்துவருகிறது. அணிசேரா நாடுகள் அமைப்பில் இந்தியாவுக்கு ஓரளவு செல்வாக்கு இருக்கிறது. இது, சீனாவின் "உலகின் நம்பர் 1 நாடு" இலட்சியத்தை நிறைவேற்ற தடைக்கல்லாக இருக்கிறது.

இந்த தடைக்கல்லை உடைக்க வேண்டுமானால், இந்தியாவை சர்வதேச அரசியலில் கவனம் செலுத்த முடியாத வகையில் தனது உள்நாட்டு விவகாரங்களிலேயே திணறடிக்க வேண்டும் என்பதுதான் சீனாவின் ராஜதந்திரம்.

இதைச் செயல்படுத்த வங்கதேசம், மியான்மர், நேபாளம், பாகிஸ்தான் என இந்தியாவைச் சுற்றியுள்ள நிலப் பகுதி நாடுகளுடன் சீனா நெருக்கத்தை வளர்த்துள்ளது. இதன்மூலம், நிலப் பகுதியில் இந்தியாவைச் சுற்றி சீனா 'செக்' வைத்துள்ளது.

இதுபோல், கடல்பகுதியில் 'செக்' வைக்க முடியாமல் சீனா திணறிக் கொண்டிருந்தது. இந்தியாவுக்கு கடல் பகுதியில் 'செக்' வைக்க வேண்டுமானால், இந்தியப் பெருங் கடல் பகுதியில் உள்ள இலங்கை மற்றும் மாலைதீவுடன் சீனா நெருங்கியாக வேண்டும்.

அதற்கான ராஜதந்திர திட்டத்தின் முதல்கட்டமாகத்தான், இலங்கையுடன் சீனா நெருங்கியது!

இதுபோல்-

இந்தியாவின் மிகநெருங்கிய நட்பு நாடாக, இந்தியப் பெருங்கடல் பகுதியில் இருந்த மாலைதீவு இருந்துவந்தது. இந்த நாட்டையும், சீனா வளைத்துவிட்டது. அங்கு சமீபத்தில் ஏற்பட்ட புரட்சியில் அதிபர் நசீத் அரசு கவிழ்ந்தது. துணை அதிபராக இருந்த வாகீத், புதிய அதிபராக மாறியிருக்கிறார். இந்தப் புரட்சியின் பின்னணியில் இருந்தது, சீனாதான்.

இப்படி-

நிலத்திலும் நீரிலும் ராஜதந்திர வலையால் இந்தியாவைச் சீனா சுற்றிவளைத்துவிட்டது.

இந்த வலையை அறுத்தெறிய முடியாமல் இந்திய அரசு திணறி வருகிறது. ஆனால், இந்த வலையை அறுக்க, அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

அந்த முயற்சிகளில் சில:

* சீனாவுடன் நெருக்கமாக இருக்கும் மியான்மரை, அமெரிக்க கூட்டணி நாடுகள் மெல்ல மெல்ல வளைத்து வருகின்றன. அங்கு இராணுவ ஆட்சி இருந்தது. கடும் பொருளாதார நெருக்கடியில் தவித்த மியான்மர் அரசிடம், "ஜனநாயக ஆட்சிமுறையை அமுல்படுத்தினால், பொருளாதார நிதியுதவிகள் தாராளமாக வழங்கப்படும்" என அமெரிக்க கூட்டணி நாடுகள் கூறியுள்ளன. இதை ஏற்ற இராணுவ ஆட்சி, 'பாதி' ஜனநாயக அரசை ஏற்படுத்தியிருக்கிறது. அங்கு அமைக்கப்பட்டுள்ள புதிய அரசில் தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் 60 சதவீதம், ராணுவத்தால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் 40 சதவீதம் இடம்பெற்றுள்ளனர். இதையடுத்து, பொருளாதார உதவிகள் வழங்கும் நடவடிக்கை தொடங்கியுள்ளது.

* பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் நடுவில் உள்ள பகுதி, பலுசிஸ்தான். இந்தப் பகுதிக்கு, 1947 ஆகஸ்ட் 11இல் பிரிட்டிஷ் அரசு விடுதலை வழங்கியது. இந்தியாவுடன் இணைய பலுசிஸ்தான் மன்னர் விருப்பக் கடிதம் எழுதி அப்போதைய பிரதமர் நேருவுக்கு அனுப்பினார். ஆனால், அதை நேரு ஏற்கவில்லை. இதனால், பாகிஸ்தானுடன் அந்த மன்னர் இராணுவக் கூட்டணி ஒப்பந்தம் செய்தார். ஆனால், 1948 மார்ச் 27இல் அதிரடிப் படையெடுப்பால் பலுசிஸ்தானை பாகிஸ்தான் இணைத்துக் கொண்டது.

சர்வதேச நாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள தலிபான் மற்றும் அல்கெய்தா தீவிரவாதத்துக்கு முடிவு கட்ட, பலுசிஸ்தானைப் பிரித்து ஐ.நா. கட்டுப்பாட்டின் கீழ் தனி நிர்வாகத்தில் வைக்க வேண்டும் என அமெரிக்காவில் சில முயற்சிகள் தொடங்கியுள்ளன. பலுசிஸ்தானைப் பிரித்து தனி நாடாக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில், கடந்த பெப்ரவரியில் குடியரசுக் கட்சி எம். பிடானா ரோராபேக்கர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். பாகிஸ்தான் எதிர்ப்பால் அந்த தீர்மானம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், எந்த வேளையும், அந்த தீர்மானம மீண்டும் உயிர்பெறலாம்!

**சர்வதேச அரங்கில்...**

சர்வதேச அரசியலில் முக்கியத்துவம் பெறுவதற்காக, ஆபிரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளுடன் சீனா நெருக்கத்தை வளர்த்து வந்தது. ஆபிரிக்க நாடுகளுடன் வைரச் சுரங்க ஒப்பந்தங்கள், தாது சுரங்க ஒப்பந்தங்களைச் செய்த சீனா, வளைகுடா நாடுகளுடன் எண்ணை இறக்குமதி மற்றும் எலக்ட்ரோனிக் பொருட்கள் ஏற்றுமதி ஒப்பந்தங்களை செய்துள்ளது. இதோடு, ஆபிரிக்க நாடுகளின் சர்வாதிகார ஆட்சிகளைத் தொடர்வதற்கான ஆயுத தளபாடங்கள் மற்றும் போர்ப் பயிற்சிகளையும் வழங்கிவந்தது.

சீனாவின் இந்த ராஜதந்திரத்தை, அமெரிக்கக் கூட்டணி நாடுகள் பதிலடி ராஜதந்திர நடவடிக்கைகளால் முறியடித்து வருகின்றன:

சமீபத்தில் துனிஷியா, எகிப்து, லிபியா ஆகிய நாடுகளில் மக்கள் புரட்சியால் ஆட்சிமாற்றம் நடந்துள்ளது. சிரியாவிலும் புரட்சி உச்சகட்டமாகியிருக்கிறது!

வடகொரியாவுடன் சீனாவும் ரஷ்யாவும் மிக நெருக்கமாக இருந்துவந்தன. அந்த நாட்டில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு. இதை, சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் செக் வைக்கும் நடவடிக்கைக்கு அமெரிக்க கூட்டணி நாடுகள் பயன்படுத்தியுள்ளன.

"உணவுத்தட்டுப்பாட்டை நீக்க முழு உதவி அளிக்கிறோம். அதற்குப் பதிலாக, தென்கொரியாவுடன் மோதல் போக்கை கைவிட வேண்டும். அணுஆயுதப் போட்டியையும் கைவிட வேண்டும்" என்று அமெரிக்கக் கூட்டணி நாடுகள் கூறியதை வடகொரியா ஏற்றுள்ளது.

தைவான் (சீன மக்கள் குடியரசு) மற்றும் ஜப்பானுடன் சீனாவுக்கு 'பரம்பரை' பகை உள்ளது. அந்த இரு நாடுகளுடன் அமெரிக்க கூட்டணி நாடுகள் நெருக்கத்தை மிக வேகமாக வளர்த்து வருகின்றன. வியட்னாமுடன் ஒரு காலத்தில் நட்பாக இருந்த சீனா, இப்போது தென்சீனக்கடல் பகுதி உரிமைப் போட்டியால் மோதலைத் தொடங்கியுள்ளது. இந்த விவகாரத்தில், வியட்னாமை அமெரிக்கக் கூட்டணி நாடுகள் ஆதரித்து வருகின்றன.

**இழுபறி... புது 'செக்'**

அமெரிக்கக் கூட்டணி நாடுகளின் அதிரடிகளால், பல பகுதிகளிலும் சீனாவின் ஆதிக்கம் மெல்ல மெல்ல குறைந்து வருகிறது. இதன் அடுத்த கட்டமாகத்தான், ஐ.நா. மனிதஉரிமைக் கவுன்சிலில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்தது...

அமெரிக்காவின் தீர்மானத்தில், "மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை இலங்கை அரசின் ஒப்புதல் பெற்று செயல்படுத்த வேண்டும்" என ஒரு திருத்தத்தை இந்தியா கொண்டுவந்தது. இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்காக, இந்தத் திருத்தத்தை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் விளைவு..?

மனிதஉரிமை நடவடிக்கைகள் தொடர்பான ஐ.நா. மனிதஉரிமைக் கவுன்சிலின் பரிந்துரைகளை இலங்கை ஏற்கும் என எதிர்பார்க்க முடியாது. "எங்கள் ஒப்புதல் பெற்றாக வேண்டும் என்றுதான் தீர்மானத்திலேயே கூறப்பட்டுள்ளது" என்று இலங்கை முரண்டு பிடிக்கும். அதை சீனாவும் ஆதரிக்கும்.

எனவே, ஐ.நா.வில் அமெரிக்க கூட்டணி நாடுகள் இன்னொரு அதிரடி தீர்மானத்தைக் கொண்டு வந்து, இலங்கைக்கும் சீனாவுக்கும் அதிரடி "செக்" வைக்கும். இலங்கையின் திரு கோணமலை பகுதியில் அமெரிக்க கூட்டுப்படைகள் அதிரடியாக முகாம் அமைத்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை!

அந்த அதிரடி "செக்" நடவடிக்கையின் பக்கவிளைவாக, உலகின் பல பகுதிகளிலும், அமெரிக்க கூட்டணிக்கும், சீனா தரப்புக்கும் சிறு சிறு போர்கள் வெடிக்கும். இந்த சிறுசிறு போர்கள் பெரிதாக வளர்ந்தால், 3ஆவது உலகப் போரே வெடிக்கும்.




தம்ரோ
புதுவருட சிறப்பு விற்பனை
INNOVEX
Lowest Prices Guaranteed
3D TV
தம்ரோ உத்தரவாதம்
19" LED TV Rs. 18,900
USB MOVIE , HDMI, PC INPUT, HD
24" LED TV Rs. 24,900
FULL HD, USB, HDMI, PC INPUT
32" LED TV Rs. 42,900
USB MOVIE , HDMI, PC INPUT, HD
42" 3D LED TV Rs. 129,000
FULL HD , USB MOVIE , HDMI
இலவசம் 4 3D கண்ணாடிகள்
Pioneer
World's Best Sound
DVD PLAYER
Rs. 5,500
USB MOVIE, MP3, WMA & JPEG
DVD HOME THEATRE SYSTEM
Rs. 27,900
USB, HDMI, KARAOKE FUNCTION
DOLBY DIGITAL, DOLBY PRO LOGIC II
DVD HOME THEATRE SYSTEM
Rs. 44,900
MP3, WMA, DIVX, JPEG , DOLBY DIGITAL, DOLBY PRO LOGIC II , KARAOKE
தம்ரோ உத்தரவாதம்
CAR AUDIO FULL SET
Rs. 17,900
CD , MP3 , USB , WMA - 200W, 4 SPEAKERS
MULTIMEDIA HEADPHONE
Rs. 1,500
UPWARDS
Preethi
India's No.1 Mixer Grinder
MIXER GRINDER - LAVENDER Rs. 6,290
MIXER GRINDER - NITRO Rs. 8,790
MIXER GRINDER - STEELE Rs. 14,690
தம்ரோ உத்தரவாதம்
SAMSUNG Mobile
E1085F Rs. 2,990
E2232 Rs. 6,750
GTC3303 Rs. 10,900
C 3222 Rs. 10,900
C5212i Rs. 13,900
Galaxy Y Colour Plus Rs. 24,900
Rs. 27,900
Daisy 3+2
சேல்
சேல்
Rs. 39,900
Meridian 3+1+1
சேல்
Genuine Leather
Palace 3+2+1
Genuine Leather
Glory 3+1+1
சேல்
Wardrobe
Rs.19,900
சேல்
Dressing table
Rs.8,900
Rs.12,900
MONARCH
Rs. 3,900
KCT 015
Rs. 3,775
OCT 032
சேல்
ஸ்ப்ரிங் மெத்தை
DVAC 001
Rs. 825
DAC 009
KBAV 001 Rs. 3,900
KAV 046 Rs. 5,900
TSF 002P + TSC 003P Rs. 23,475
ஆரம்ப கட்டணமில்லாத, வட்டியில்லாத, இலகு கொடுப்பனவு முறைக்கு
உங்கள் அருகிலுள்ள காட்சியறையை அறிந்து கொள்ள அழையுங்கள் 077 2 857 857
தம்ரோ

# பருத்தித்துறை பிரதேச செயலகம் 36 ஓட்டங்களால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி பிரதேச செயலக அணியை பருத்தித்துறை பிரதேச செயலக அணி 36 ஓட்டங்களால் வெற்றிகொண்டது.

யாழ். மாவட்ட விளையாட்டு செயலகத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது.

விலகல் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த 19ஆம் திகதி கரவெட்டி இமையாணன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மருதங்கேணி பிரதேச செயலக அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி 14 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரகாஷ் ஆறு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 59 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மகிந்தன் நான்கு, சதீஸ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 95 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய மருதங்கேணி பிரதேச செயலக அணி 11.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிதர்சன் 10, கண்சுதன் 14, மகிந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீசசில் றெசான் மூன்று, ஜெயதீபன் பிரசாத் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி)

# பிரதேச மட்ட கால்பந்து ஆதிசக்தி அணி வெற்றி

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்திற்குட்பட்ட அணி களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணி அபார வெற்றி பெறறது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கினால் வடமராட்சிப் பிரதேசத்திற்குட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியும், உடுப்பிட்டி இளைஞர்கள் அணியும் மோதின.

இதில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ஆதிசக்தி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டியின் பிரதம நடுவராக எஸ். கௌசீகன், உதவி பக்க நடுவர்களாக எம்.சுரேஸ்குமார், எஸ். சசிகண்ணன் ஆகியோர் கடமையாற்றினர். (எஸ்)

# மருதங்கேணி கோட்ட மட்ட முடிவுகள்

மருதங்கேணி கோட்ட மட்டப் போட்டிகளின் முடிவுகளின் தொடர்ச்சி...

**200 மீற்றர் ஓட்டம்**

ஆர். ரஞ்சிதன், ஆழியவளை, சி.சி.ரி.எம்., பி. பிரகாஷ், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, எஸ். கேதீஸ், ஆழியவளை சி.சி.ரி.எம்.

**400 மீற்றர் ஓட்டம்**

ஏ. அன்ரன் சிலக்சன், மணற்காடு ஆர்.சி.ரி.எம்., இ. கபிராஜ், மணற்காடு ஆர்.சி.ரி. எம்., பி. சுஜந்தன், நாகர் கோவில் ம.வி.

**800 மீற்றர் ஓட்டம்**

ஜெ. ஜெபதாஸ், மணற்காடு ஆர்.சி.ரி.எம்., எஸ். நாகேஸ்வரன், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, பி. நிரோசன், குடத்தனை ஜி.ரி.எம்., பி. அஜிதன், உடுத்துறை ம.வித்தி.

**1500 மீற்றர் ஓட்டம்**

ஜெ. ஜெபதாஸ், மணற்காடு ஆர்.சி.ரி.எம், எஸ். நாகேஸ்வர், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, எஸ். கேதீஸ், ஆழியவளை சி.சி.ரி.எம்.

(116)

# ஆவரங்கால் இந்து, மத்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி

(புத்தூர்)

கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தின் 66ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் ஆவரங்கால் மத்தி அணி தகுதி பெற்றுள்ளன.

மின்னொளியில் நடத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் கைதடி சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதன் முதலாவது அரையிறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய ஆரவங்கால் மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிககுத் தெரிவானது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், புத்தூர் கலைமதி ஏ அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒன்றுக்கு சளைத்தவர்கள் என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடினர். இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (02)



சொக் அன் புளு வெற்றிக் கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை யுனைற்றெர் அணி கிண்ணம் வென்றது. யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இப்போட்டி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாநகர முதல்வர் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதைக் காணலாம். இப்போட்டி யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம், யாழ். கூடைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (07)

# போராடி வென்றது ஜொனியன்ஸ்

(யாழ்ப்பாணம்)

சன்சயன், லக்சயன் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் யாழ் சென்றல் அணியை இரண்டு விக்கெட்டுக்களால் ஜொனியன்ஸ் அணி வீழ்த்தியது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் யாழ். சென்றல் அணிக்கும், ஜொனியன்ஸ் அணிக்குமிடையிலான போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி 42.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித்குமார் 28, பாலேந்திரா 27, மயூரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன், டக்சன், விதுசன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 189 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி ஆரம்பத்தில் தட்டுத் தடுமாறி விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு கட்டத்தில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த சன்சயன், லக்சயன் இணை மிகச் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். ஏழாவது விக்கெட்டுக்காக இணைந்த இவர்கள் இருவரும் 138 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் ஜொனியன்ஸ் அணி 35.4 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் சன்சயன் 81, லக்சயன் 58 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் ஹட்ரிக்குடன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (07)



மயூரன்

## சைக்கிள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் திறந்த சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் இப்போட்டி நிறைவடையவுள்ளது. (எஸ்)

# அளவெட்டி அருணாசலத்தின் தொடரும் சாதனை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணாசலம் ம.வி. அணி தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட மூன்றாம் இடத்திற்கான மற்றும் இறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணாசலம் ம.வி. அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின.

மூன்று செட்களைக் கொண்ட இந்த இறுதிப் போட்டியில் முதல் செட்டை 21-25 என்ற கணக்கில் தோல்வியடைந்து பின்னடைவை அளவெட்டி அருணாசலம் ம.வி. அணி சந்தித்தது. இருப்பினும் பின்னர் சுதாகரித்துக் கொண்ட அருணாசலம் ம.வி. வீராங்கனைகள் மிகவேகமாக, நுட்பமான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி ரசிகர்களின் பாராட்டையும் பெற்றதோடு, அணியின் வெற்றியையும் உறுதி செய்தனர்.

இறுதியில் இரண்டாவது செட்டை 25-19 என்ற கணக்கிலும், மூன்றாவது செட்டை 25-11 என்ற கணக்கிலும் வென்று வலய மட்ட சம்பியனாக மீண்டும் அளவெட்டி அருணாசலம் ம.வி. தெரிவானது.

கடந்த 2010, 2012ஆம் ஆண்டுகளிலும் வலய மட்டத்தில் அளவெட்டி அருணாசலம் ம.வி. சம்பியனானமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியும், இளவாலை மெய்கண்டான் ம.வி. அணியும் மோதின.

ஆரம்பம் முதலே வேகமான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி 25-13, 25-19 என்ற நேர் செட் கணக்கில் வென்று மூன்றாமிடத்தைப் பிடிதது்க் கொண்டது. (93)





வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இரண்டாவது இடத்தைப் பிடித்துக் கொண்ட வசாவிளான் மத்திய ம.வி. அணியையும், மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்ட அராலி சரஸ்வதி வித்தியாலய அணியையும் காணலாம். இப்போட்டி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு : தயாளபாலன்)

# தரங்கெட்டவர்களின் ஆதரவு தேவையில்லை

தமிழகத்தில் அண்மைக்காலமாக இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு விஜயம் செய்யும் புலிகளுக்கு சார் பற்றவர்களை (இவர்கள் இலங்கை சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்களாக இருப்பார்கள் அல்லது ஏதோ விதத் தில் இலங்கை அரசுடன் தொடர்புடை யவர்களாக இருப்பார்கள்) முற்றுகை யிட்டு, மிரட்டி தமிழகத்திலிருந்து வெளியேற்றும் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

அண்மையில் நெல்லை மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழ கத்து குற்றவியல்துறை சார்பில் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு "போதை பழக்கமும், குற்றங்களால் பாதிக்கப்பட்டவர் களும்" என்ற தலைப்பில் நடை பெற்ற கருத்தரங்கிற்கு உரையாற்ற வந்திருந்த கொழும்பு பல்கலைக் கழக சட்டத்துறை பேராசிரியை ஜீவா நிரியெல்ல மீதும் இந்தக் குற்றம் புரியப்பட்டுள்ளது. இதில் மிகக் கேவலமான விடயமென்ன வெனில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் சேவியர் தலைமையில் வந்த தமிழ் குண்டர்களே இலங்கை பேராசிரியையை கருத்தரங்கு மண்ட பத்திலிருந்து வெளியேற்றி உள்ளனர்.

2009 இல் இலங்கையில் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரே இலங்கை யர்களை வெளியேற்றும் சம்பவங் கள் தமிழகத்திலுள்ள சிறு குழுவின ரால் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்தக் குழுவினருக்கு வை.கோபாலசாமி, நெடுமாறன் மற்றும் சீமான் வகையறாக் கோஷ்டிகளும் முன்னர் புரட்சிகர "இடதுசாரியம்" பேசி தற்போது தமிழ் தேசியவாதத்தை தூக்கிப் பிடித்திருப்பவர்களும் பின்னணியில் உள்ளனர்.

எல்லாச் சம்பவங்களிலும் பத்துப் பதினைந்து பேர் கொண்ட குழுவி னரே சம்பந்தப்பட்டுள்ளனர். ஆனால் ஏதோ முழுத்தமிழகமே புலிகளுக்கு சார்பற்றவர்களை வெளியேற்றும் போராட்டத்தில் வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதான பிரமையை ஏற்படுத்தும் வகையில் தமிழகத்து "பெரும்" "சிறு" ஊடகத்திலிருந்து புலம்பெயர் ஊடகங்கள் வரை இச்செய்திகளை வெளியிடுகின்றன.

"இலங்கை அரசு தமிழர்கள் மீது போர்க்குற்றம் புரிந்துள்ளது, எனவே சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களை யும் தற்போதைய இலங்கை அரசுடன தொடர்புடையவர்களையும் தமிழகத் தினுள்வர அனுமதிக்கக்கூடாது" என்பதே இந்தக் குழுவினரின் சுலோகங்களாகத் தெரிகின்றது.

அப்படியானால் இந்திய இராணுவம் 1987-1990 ஆண்டு காலப்பகுதியில் புலிகளுடனான யுத்தத்தில், சாதாரண தமிழர்கள் மீதும் பாரிய போர்க்குற்றங்களை நிகழ்த்தினர்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. அப்போது இவர்கள் தமது சொந்த இராணுவத்திற்கு எதிராக ஏன் இவ்வளவு ஆக்ரோசமாக எழவில்லை?

இலங்கையில் வாழும் சகல இன மக்களுக்கும் தமிழகத்திற்கும் சரித்திரபூர்வமான நீண்டகால வரலாற்றுத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. இதனை தற்போதைய தமிழகத்து சினிமா அரசியல்வாதிகள் இலங்கை தமிழ் மக்களுக்கும் தமிழகத்திற்கும் மாத்திரமே சரித்திரபூர்வமான உறவுப்பாலம் இருந்ததாக குறுக்கிச் சித்திரித்து, இலங்கைத் தமிழ்மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தனது யாழ்ப்பாணத்து விஜயம் பற்றி திருப்திகரமான செய்திகளையே வெளியிட்டுள்ளார். இலங்கைத் தமிழர்கள் பற்றி கரிசனை கொண்டிருக்கும் ஏனைய வர்களும் இவரை முன்மாதிரியாகப் பின்பற்றி இலங்கை சென்று அந்நாட்டு மக்களை ஏன் சந்தித்து வரக்கூடாது?

போர் முடிந்துவிட்டது, தமிழ் மக்கள் நிம்மதியாக வாழுகிறார்கள், இப்போது இலங்கையிலுள்ள நிலைமையை நேரில்வந்து பார்க்கும்படி கருணாநிதிக்கும் ஜெயலலிதாவிற்கும் இலங்கை அரசு பகிரங்கமாக அழைப்புகளை விடுத்தது. இந்த அழைப்புகளை உதாசீனம் செய்துவிட்டு இலங்கைத் தமிழர்கள் பற்றி பேச இந்த இவருக்கும் என்ன உரிமை இருக்கின்றது?

இந்தியவாழ் தமிழ் இனத்தவர்கள் இலங்கைத் தமிழ் இனத்தவர்கள் மீதான நியாயபூர்வமான கரிசனைகளை கொண்டிருப்பதையே, இலங்கையின் சகல இன மக்களும் விரும்புகிறார்கள்.

**- வானவில் மார்ச் 15 இதழிலிருந்து.**



# அரசு எதிர்கொண்டுள்ள இரு சவால்கள்

**- சாலையூரான்**



அமெரிக்காவுக்கு எதிரான இலங் கையின் முன்னெடுப்புகளுக்கு பாராட் டுக்கள் தெரிவிக்கப்படும் அதே சமயம் சில தென்னிலங்கை கட்சிகள் நாட் டுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை தவிர்க்க தற்போதைய ஆட்சியாளரை அதிகாரத்திலிருந்து அகற்ற வேண்டு மென்பதையும் வலியுறுத்தியிருக் கின்றன.

எதிரும் புதிருமான இக்கருத் துக்கள் நடப்பிலுள்ள இன்றைய அரசை ஆதரிப்பதும் அவ்வாறே அகற்றுவதும் குறித்து நாட்டு மக்கள் மத்தியில் நிலவும் மனவிருப்பங்க ளின் வெளிப்பாடாகும்.

அந்த அளவுக்கு உள்நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஒருபுற மும் வெளிநாடுகளின் அழுத்தங்கள் மறுபுறமுமாக அரசை நோக்கி முனைப்பு பெற்றிருக்கின்றன.

மறுபுறத்தே ஐரோப்பாவின் சில நாடுகளின் தலையீட்டையும் அழுத் தங்களையும் தவிர்க்கும் நோக்கில் அங்குள்ள தூதரகங்களை மூடிவிட அரசு ஆலோசித்து வரும் அதே சமயம், இலங்கை மீதான தனது தலையீடுகளுக்கு வசதியாக புதிய அதிகாரிகளை நியமிக்க அமெரிக்கா முயற்சிகளை மேற்கொண்டு வருவதும் கவனத்துக்குரியது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இலங்கை மீதான அதன் நகர்வு அதற்கு புதியதொரு அனுபவமல்ல. உள்நாட்டில் நிலவும் முரண்பாடுகளை தனது தலையீட்டுக்கு வசதியாக கையாளுவது என்பது அமெரிக்காவுக்கு கைதேர்ந்த ஒரு விடயம்.

இதில் இலங்கை அர சால் நியமிக்கப்பட்ட நல்லி ணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமெரிக்கா வுக்கு கிடைத்திருப்ப தென்பது அதன் தலையீட் டையும் மேலாண்மையையும் இலகு படுத்த கிடைத்திருக்கும் வசதியான ஒரு கருவியாகும்.

இப்போது நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நிராகரிக் கவும் அவ்வாறே ஆதரிக்கவும் முடியாத ஒரு நிலைமை இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இப்போது புதிய கௌரவப் பிரச்சி னைகள் இலங்கை அரசுக்கு ஏற்பட்டி ருபபதை நாட்டு மக்கள் மாத்திரமன்றி அரசில் அங்கம் வகிக்கும் அதன் அமைச்சர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

உண்மையில் இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற தற்போதைய சங்ட மான நிலைமை அரசுத் தலைமை யைப் பொறுத்தவரை தேவையற்ற ஒரு துன்பமாகும்.

போரின் முடிவுக்கு பிறகு, போரில் தோற்றுப் போனவர்கள் மற்றும் கூட வாழ்ந்த மக்களின் மனங்களில் வெறுப்பும் விரக்தியும் வளர்வதற்கு இடமளித்ததன் ஒரு பக்க விளைவே தற்போது அதற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையாகும்.

இதற்குள் பேசு பொருளாக இன்னும் வெளிக்கொண்டு வரப்படாமல் விடப் பட்டிருக்கும் மற்றொரு துன்பமான விடயம் மீள்குடியமர்ந்த மக்கள் வாழ்வு மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாகும்.

மீள்குடியமர்ந்த பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட உட்கட்டுமான அபிவிருத்திகள் அம் மக்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஏற்பட்டிருக்கும் திருப்தியின்மையும், அரசை தமிழ் மக்கள் சாதகமாக நோக்கும் நிலையை தவிர்த்திருக்கின்றன என்றே கூறவேண்டும்.

இப்போது இரண்டு பாரிய சவால் கள் அரசின் முன்னால் வந்து நிற் கின்றன. ஒன்று நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி. மற்றையது போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க அரசு தவறியிருப்பது.

இந்த இரு சவால்களையும் எதிர்கொள்ள காலம் தாழ்த்துவது நடப்பிலுள்ள அரசை மக்கள் நிராகரிக்க முயற்சிப்பதில் போய் முடியலாம்.

போர்க்குற்றங்களை தொடர்புபடுத்தி அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகள், சந்தர்ப்பம் வாய்க்கும் போது உள்நாட்டின் பொருளாதார நெருக்கடியையும் ஒரு கருவியாக பயன்படுத்தலாமென்பதை அரசு தலைவர்கள் கவனத்தில் கொண்டு செயற்படவேண்டிய தருணம் இது.

# ஜெயகாந்தன் எழுதுகிறார்:

என் குடும்பத்தில் என் தந்தையோ, அவரது சகோதரர்களோ, யாருமே குடிப்பழக்கம் உள்ளவர்கள் அல்ல. அந்தக் காலத்தில், குடிப்பது சட்ட விரோதமும் அல்ல. சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில், குடிக்காமல் இருந்தும் கூட, எங்கள் குடும்பம் நிர்மூலமாக ஆனதற்கு, என் தந்தையே காரணமாக இருந்தார்.

பரஸ்பரம் சகோதரர்களிடையே நிலவிய பகைமையினாலும், அறியாமையால் விளைகிற ஆத்திரத்தாலும், கோபத்தாலும், என் செல்வந்த குடும்பம், சிறுகச் சிறுக அழிந்து சிதைந்ததை நான் நேரில் கண்டேன். விபசாரத்தாலும், குடியினாலும் குடும்பம் அழிகிற மாதிரி, கோபத்தால் அழிந்த குடும்பங்கள் எத்தனை? எனவே, கோபிக்கக் கூடாது என்றொரு சட்டம் போட்டால் எப்படி இருக்கும் என்று நான் காரணத்தோடு நினைப்பது எவ்வளவு நகைப்புக்குரியது. அது மிகவும், "சப்ஜக்டிவ் அப்ரோச்" அல்லவா?

இந்தப் பிரச்சினைகளை வேறொரு கோணத்திலிருந்து அணுக வேண்டும். ஏனெனில், நெறிகளும், தர்மங்களும், நல்லொழுக்கங்களும் சட்டத்தின் நுனியில் மட்டும் நிற்பன அல்ல. எல்லா மக்களும் விபசாரத்தில் ஈடுபட்டிராததன் காரணம், விபசாரம் தடை செய்யப்பட்டிருப்பதால் மட்டும்தானா?

எல்லாரும் குடிக்காமல் இருப்பது, மதுவிலக்குச் சட்டத்தால் தானா? இல்லை... அவரவர் பண்பால்.

இப்போது, நான் பெரிய மனிதர்கள் தரும் விருந்துகள், விழாக்கள் முதலி யவற்றில் கலந்து கொள்கிறேன். அங்கே யெல்லாம் குடிப்பது எவ்வளவு நாகரிகமாக, ஒரு மரபுடன் நடக்கிறது! இப்படியும் சில நெறி முறைகளை கடைப்பிடிப்பதுதான், எதிலுமே முக்கியம் என்று எனக்கு தோன்றுகிறது.



ஜீவகாருண்யம் சிறந்ததுதான். இதற்காக, கசாப்புக் கடைகளைத் தடை செய்யவில்லை என்பதால், கண்ட இடங்களிலும், கோவில்க ளிலும், கசாப்புக் கடையை அனுமதிக்கலா காது. நெறிகளும், முறைகளும் எதற்கும் தேவையாகிறது. அது இல்லாத போது அழிவும், அனர்த்தமும் நேரிடுகின்றன!

# பகிர்தல் பழகு!



அன்னை தெரசாவின் வீட்டுக்கு அருகே ஏழைக் குடும்பம் ஒன்று வசித்து வந்தது. அவர்கள் சாப்பிட்டே பல நாட்கள் ஆகியிருந்தன. இளகிய மனம் கொண்ட அன்னை தெரசா, அவர்களுடைய வறுமையை அறிந்தபோது மனம் வருந்தினார். கொஞ்சம் அரிசியை எடுத்துக் கொண்டு அந்த வீட்டுக்கு விரைந்தார்.

அந்த வீட்டுப் பெண்மணியிடம் அரிசியைக் கொடுத்து பசியாற்றிக் கொள்ளச் சொன்னார். அந்தப் பெண்மணியின் கண்களில் ஆனந்த மின்னல். அடுத்த வினாடியே அந்த அரிசியில் பாதியை இன்னொரு பையில் அள்ளிக் கொண்டு வெளியே ஓடினார் அந்தப் பெண்மணி. சிறிது நேரம் கழித்து திரும்பி வந்த அந்தப் பெண்மணியிடம் தெரசா கேட்டார்.

"அத்தனை அவசரமாய் எங்கே போனீர்கள்?"

அந்தப் பெண்மணி மூச்சிரைத்துக் கொண்டே சொன்னார், "பக்கத்தில் இன்னொரு வீடு இருக்கிறது. அவர்களும் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. அவர்களும் சாப்பிடட்டுமே என்று அந்த அரிசியைக் கொண்டு போய் கொடுத்தேன்".

அன்னை தெரசா நெகிழ்ந்தார், அந்தப பெண்மணியின் இளகிய மனதைக் கண்டு வியந்தார்.

பகிர்தல் ஓர் அற்புதமான மனித நேயப்பண்பு. மனதில் ஒளிந்திருக்கும் அன்பின் வெளிப்பாடு பகிர்தலில் வெளிப்படும். ஆனால் அந்த பண்பை ஊட்டி வளர்ப்பதில் பெரும்பாலானவர்கள் அக்கறை காட்டுவதில்லை என்பதுதான் சோகம்.

"தனக்கு மிஞ்சியதுதான் தானம்", "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடணும்" என்றெல்லாம் உலவுகின்ற பழமொழிகள் உண்மையில் பகிர்தலின் அர்த்தத்தையே அழித்து விடுகின்றன. தனது தேவைக்கும் அதிகமாக, உபரியாய் இருப்பதை மட்டுமே பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் எனும் ஒரு தவறான பாடத்தை இத்தகைய "கிழமொழிகள்" நமக்குச் சொல்லித் தருகின்றன.

முதலாவது, பகிர்தல் என்பது பொருள் சார்ந்த விஷயமே கிடையாது. அது நமது மனம் சார்ந்த விஷயம். பட்டினியின் விளிம்பில் கிடந்தாலும் பகிரும் மனப்பான்மையுடன் இருக்கலாம் அல்லது சுவிஸ் வங்கியில் பணத்தைப் போட்டும் சுயநலத்துடன் திரியலாம். எல்லாம் நமது மனதில்தான் இருக்கிறது.

அழிந்து வரும் உயிரினங்களைப் போல இன்றைக்கு பகிர்தலைப் பேணும் மனிதர்கள் அருகிவிட்டார்கள். பலர் தங்களுக்காகவும், தங்கள் குடும்பம் அல்லது உறவுகளுக்காகவும் மட்டுமே வாழ்கிறார்கள். சொல்லப் போனால் பாதிப்பேர் தங்கள் குடும்பம் மற்றும் உறவுகளையே கூட கண்டு கொள்வதில்லை என்பது துயரத்தின் உச்சம்.

அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. சிறு வயதில் தரப்படும் போதனைகள் அதில் ஒன்று. ஒரு குழந்தையின் மனதில் உருவாக்கப்படுகின்ற மதிப்பீடுகளுக்கு வலிமை அதிகம். பெரும்பாலும் நாம் பிள்ளைகளை டாக்டர், என்ஜினியர் ஆக்க வேண்டும் என்றே ஆர்வம் காட்டுவோம். அந்த ஆர்வத்தில் ஆயிரத்தில் ஒரு பகுதியைக் கூட அவனை ஓர் இளகிய மனம் படைத்த மனிதனாக்க வேண்டும் என்பதில் காட்டுவதில்லை.

"சேச்சே.. நான் அப்படியில்லை!" என நினைக்கிறீர்களா? உங்களுக்கு ஒரு சின்னச் சோதனை! உங்கள் குழந்தையிடம் பத்து ரூபாய் கொடுத்து ஒரு பொருள் வாங்கி வரச் சொல்கிறீர்கள். போகும் வழியில் எதிர்ப்படும் ஏழைக்கு அந்த பத்து ரூபாயை அவன் கொடுக்கிறான் என வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனநிலை எப்படியிருக்கும்? அந்தக் குழந்தையின் ஈகைக் குணத்தைப் பாராட்டுவீர்களா? அல்லது இதெல்லாம் தப்பு என கண்டிப்பீர்களா?

முல்லைக்குத் தேர்கொடுக்கும் பாரியும், மயிலுக்கு போர்வை கொடுக்கும் பேகனும் நமக்கு வெறும் வரலாற்றுக் கதைகள் மட்டும்தானா? உங்கள் மகன் தன்னிடமிருக்கும் ஒரு விலையுயர்ந்த பொருளை நண்பனின் தேவைக்காய் கொடுத்தால் பாராட்டுவீர்களா? இப்போது சொல்லுங்கள்!

பகிர்தல் பதியம் போடப்பட வேண்டிய பருவம் - பால்யம்! சின்னச் சின்ன விளையாட்டுப் பொருட்களை பிறரோடு பகிர்ந்து கொள்வதிலேயே இது ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் எப்போதெல்லாம் பகிர்ந்து கொள்கிறார்களோ அப்போதெல்லாம் அவர்களை மனம் திறந்து பாராட்ட வேண்டும்.

குழந்தைகளுக்குக் கதை சொல்லும் போது ஸ்பைடர் மேன், சூப்பர் மேன் என்றெல்லாம் பேசுவதை விட, பகிர்தல், அன்பு, உறவுகள் போன்ற உயரிய கொள்கைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். டோராவும், பவர் ரேஞ்சர்களும் கொஞ்சம் ஒதுங்கியே இருக்கட்டும். சின்ன வயதில் விதைக்கும் பகிர்தல் விதை, முதுமை வயதில் கூட தழைத்து வளரும்.

பகிர்தல் எப்போதும் பொருளாதாரம் சார்ந்ததாய் இருக்க வேண்டுமென்பதில்லை. ஒரு நல்ல ஆலோசனை, ஓர் ஆறுதலான வார்த்தை என எதுவாகவும் இருக்கலாம். சோர்வாக இருக்கும் உங்கள் நண்பருக்கு ஒரு சின்ன புன்னகையை அளிப்பதில் கூட பகிர்தலின் சுகம் இருக்கிறது.

பகிர்தல் என்பது பூமராங் போல! அதை நாம் செய்யச் செய்ய அது நம்மைத் தேடி வந்து கொண்டே இருக்கும். ஆனால் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி பகிர்தலை மனதுக்குள் எழுதிக் கொள்ள வேண்டும். பகிர்தல் அன்பின் வெளிப்படாக இருக்க வேண்டுமே தவிர அது ஒரு கட்டாய நிகழ்வாய் இருக்கக் கூடாது. பகிர்தலை பழகிக் கொண்டவர்கள் மன அழுத்தம் அடைவதில்லை என்கின்றனர் உளவியலாளர்கள்.



கொடுப்பதால் பயன் பெறுவது கொடுப்பவர்களும்தான்! கொடுங்கள்! எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல. எந்த மனநிலையில் கொடுக்கிறோம் என்பதே முக்கியம். ஒவ்வோர் பகிர்தலிலும் அடி நாதமாய் அன்பு இருக்க வேண்டும். நம்முடைய மகிழ்ச்சியை விட அடுத்தவருடைய மகிழ்ச்சி நமக்கு முக்கியமானதாய் தோன்றும்போது நமக்குள் பகிர்தல் பெருங்கடலாய் விரியும்.

**- சேவியர்**

# எண்ணம்போல...

ஒரு ஊரில் ஒரு கிழவரும், கிழவியும் இருந்தனர்... கிழவர் எது செய்தாலும், கிழவிக்கு பிடிக்காது. இருவருக்கும் அடிக்கடி சண்டை வரும். ஒரு நாள் ஆற்றங்கரைக்கு சென்றார் கிழவர். அங்கே காலில் அடிபட்டு, நடக்க முடியாமல் இருந்தது ஒரு குருவி.

பரிதாபப்பட்டு அதை வீட்டுக்கு எடுத்து வந்து, ஒரு கூண்டு வாங்கி, அதனுள் வைத்தார் கிழவர். இதைக் கண்ட கிழவிக்கு கோபம்... "இந்த நொண்டிக் குருவியை, இங்கு எதற்குக் கொண்டு வந்தாய்?" என்று ஆத்திரப்பட்டு, அந்த குருவியை கூண்டிலிருந்து எடுத்து வீசி எறிந்தாள்.

பறந்து சென்ற குருவி, பழையபடி ஆற்றங்கரை மரத்தின மேல் உட்கார்ந்து கொண்டது. மறுநாள், ஆற்றங்கரைக்குப் போனார் கிழவர்... அப்போது, "பெரியவரே... நீங்கள் செய்த உதவிக்கு நன்றி. அதோ பாரும்... அங்கே மூன்று பானைகள் மூடி போட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அதில், ஒரு பானையை எடுத்துக் கொண்டு, வீட்டுக்குப் போய் திறந்து பாரும்..." என்றது குருவி.

கிழவரும், மூன்று பானைகளில் ஒன்றுடன் வீட்டுக்குப் போய் திறந்து பார்த்தார்... ஒரே ஆச்சரியம்... பானை நிறைய தங்கக் காசுகள் இருந்ததைப் பார்த்து சந்தோஷப்பட்டார். "இனி செலவுக்குக் கஷ்டமில்லை..." என்று எண்ணினார்.

அப்போது அங்கே வந்தாள் கிழவி... "ஏது, இந்தப் பானை நிறையத் தங்கக் காசு?" என்று கேட்டாள். கிழவரும், தான் ஆற்றங்கரைப் பக்கம் போனதையும், அந்த நொண்டிக் குருவி, இந்தப் பானையை காண்பித்ததையும் விவரமாகச் சொன்னார்.



அதைக் கேட்ட கிழவி, "ஓ... அந்த நொண்டிக் குருவியா! சரி... நானும் போய் அந்தக் குருவியைப் பார்த்துவிட்டு, இதைவிட பெரிய பானையை கொண்டு வருகிறேன் பார்..." என்று சொல்லி, ஆற்றங்கரைக்குப் போனாள்.

கிழவியை பார்த்து, "எங்கே இந்தப் பக்கம் வந்தாய்?" என்று கேட்டது குருவி. "சும்மாதான் உன்னைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன். உன்னை அனாவசியமாக நான் வீசியெறிந்து விட்டேன். என்னை மன்னித்து விடு. என் புருஷனுக்கு ஒரு பானையைக் காண்பித்தது போல், எனக்கும் ஒரு பானையை காண்பிக்க வேண்டும்..." என்று வேண்டினாள் கிழவி.

குருவியும், "கவலைப்படாதே... அதோ இருக்கும் மூன்று பானைகளில், ஒன்றை எடுத்துக் கொண்டு, வீட்டுக்குப் போய் திறந்து பார்..." என்றது. கிழவியும், மூன்று பானைகளில் பெரிதாக இருந்த ஒரு பானையுடன், அவசர அவசரமாக வீட்டுக்குப் போய் பானையைத் திறந்தாள். அவ்வளவுதான்... பானையிலிருந்து தேளும், நட்டுவாக்காலியும் குதித்து ஓடியது கண்டு ஓவென்று அலறி ஓடினாள்.

**எண்ணம் போல்தான் எதுவும் கிடைக்கும் வீண் ஆசை கூடாது.**

# சேர்த்துவைக்க முயற்சிக்கவில்லை!





பிரபு தேவா - நயன்தாரா இருவரையும் சேர்த்து வைக்க தான் முயற்சிக்கவில்லை என்று குஷ்பு கூறியுள்ளார். இருவரிடமும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளிவந்த செய்தி பற்றி கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், பிரபுதேவாவும் நயன்தாராவும் எனக்கு நல்ல நண்பர்கள். பிரபுதேவாவை நடிக்க வருவதற்கு முன்பே அறிவேன். அவர் தனித்து முதன் முதலில் பாடலுக்கு நடனம் அமைத்தது எனது படத்தில் தான்.

நயன்தாராவுக்கும் பிரபுதேவாவுக்கும் இடையில் நான் சமரசம் பேசவில்லை. அவர்கள் இருவருக்கும் இடையில் என்ன பிரச்சினை இருந்தாலும் அது அவர்களுடைய தனிப்பட்ட விஷயம். அவர்களது சொந்த விஷயத்தில் நான் நுழைய மாட்டேன். அவர்களுடைய நட்பைத் தொடர்வேன் என்று குஷ்பு தெரிவித்துள்ளார்.

திருமணம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடீரென பிரபுதேவா நயன்தாரா இடையே காதல் முறிவு ஏற்பட்டுவிட்டதாகக் கூறப்பட்டது. இதையடுத்து நயன்தாரா மீண்டும் நடிக்க வந்துள்ளார். மூன்று தெலுங்குப் படங்களிலும் ஒரு தமிழ்ப் படத்திலும் ஒப்பந்தமாகி உள்ளார்.

# சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது



## நோர்வே அமைச்சர் அடித்துச் சொல்கிறார்

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்ற வாளிகளுக்கு எதிராக சர்வ தேச நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது என நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொனாஸ் ஸ்டோரே தெரிவித் துள்ளார்.

இலங்கைப் பிரஜைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன் றில் ஆஜர்படுத்த முடியாது.

போர்க்குற்றச் செயல் தொடர் பில் சுயாதீன விசாரணைக் குழு ஒன்றை நிறுவவேண்டும் என் றாலும். இதற்குக்கூட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவை யின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வ தேச நீதிமன்றில் வழக்குத் தொடருமாறு நோர்வே நாடாளு மன்ற உறுப்பினர் பீட்டர் கிட் டார்க், விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த போதே அமைச்சர் ஜொனாஸ் ஸ்டோரே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நீதிமன்றம் தொடர் பான ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை. எனவே இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையினால் மட்டுமே நட வடிக்கை எடுக்க முடியும்.

# தொடர்ந்தும் சரிகிறது ரூபாவின் பெறுமதி



(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடையவதைத் தடுக்க கடந்தவாரம் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருந்த போதும், அது பெரியளவில் வெற்றி பெறவில்லை.

கடந்த மாதம் அமெரிக்க டொலர் ஒன்று 111 ரூபா என இருந்த இலங்கை நாணயத்தின் மதிப்பு இந்தமாதம் கடுமையாக வீழ்ச்சியடைந்தது.

உச்சஅளவாக, இது கடந்த 19 ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிராக 131.60 என்ற நிலையை எட்டியது.

இந்தநிலையில் டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பை 125 ரூபாவாக நிலைநிறுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. இதனால் டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி கடந்த வியாழக்கிழமை 127.60 ஆக உயர்ந்தது.

ஆனால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வர்த்தகம் முடிவின்போது இலங்கை நாணயப் பெறுமதி மேலும் சரிந்து, டொலருக்கு எதிரான மதிப்பு 128.30 ரூபா என்ற நிலையை அடைந்தது.

## மேதினக் கூட்டத்தில்

# ஐ.தே.க.வுடன் கைகுலுக்குமா கூட்டமைப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மே தினக் கூட்டம் நடத்துவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி யாழ்ப்பாணத்தில் மே தினக் கூட்டத்தை நடாத்த ஐக்கிய தேசியக் கட்சி முயற் சித்து வருகின்றது. கூட்டத்தில் பங்கேற்பது என்றே முதலில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள முரண் பாடுகள் காரணமாக, அந்தக் கட்சியுடன் இணைந்து, மே தினக் கூட்டம் நடத்துவதா என்பது இன்னமும் தீர்மானிக்கப்பட வில்லை என சம்பந்தன் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணத் தில் மே தினக் கூட்டம் நடத் தப்படுவதனை சஜித் தரப்பினர் விரும்பவில்லை என ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய ஆயுதப் பயிற்சிபெற்ற குழு இலங்கையில் செயற்படுகிறதா?

## சிங்கள நாளிதழ் திடுக்கிடும் தகவல்



(கொழும்பு)

இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்றுக்கொண்ட குழுவொன்று இலங்கையில் இயங்கி வரு வதாக சிங்களப் பத்திரிகை யொன்று செய்தி வெளியிட் டுள்ளது.

அண்மையில் திருகோண மலை - பெரியகுளம் பிரதேசத் தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒரு வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் இந்தக் கும்ப லுக்கு தொடர்பு இருப்பதாகவும் தென் இந்தியாவிலிருந்து வந்த ஆயுதக் குழுவொன்றே இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ள தாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி குறித்த ஈ.பி.டி.பி உறுப்பினர் படு கொலை செய்யப்பட்டிருந்தார். சடலம் மீட்கப்பட்ட இடத்தில் 'துரோகிகளுக்கு இடமில்லை', மீண்டும் வந்து விட்டோம் என எழுதப்பட்டிருந்ததாகக் குறிப் பிடப்படுகிறது.

படகு மூலம் தென் இந்தியா விலிருந்து குறித்த தரப்பினர் இலங்கைக்கு வந்துள்ளனர். இரகசியமான முறையில் ஈ.பி.டி.பி உறுப்பினரை கொலை செய்த நபர்கள், மீண்டும் இந்தியா செல்ல எடுத்த முயற்சி தோல்வி யடைந்துள்ளது.

இதனால் இந்த நபர்கள் தற் போது கிழக்கு மாகாணத்தில் தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரகுநாதன் எனப்படும் முத்து என்பவரே படுகொலை செய்யப்பட்டி ருந்தார்.

இறுதியாக முச்சக்கர வண்டிச் சாரதியாக கடமையாற்றிய குறிதத நபர் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் எனவும், பின்னர் ஈ.பி.டி.பி.யில் இணைந்து கொண் டதாகவும் தெரியவருகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்கள் இந்தியா வில் பயிற்சி பெற்றுக் கொண்ட தாகத் தெரிவித்துள்ளனர்.

இந்திய முகாம் ஒன்றில் இரா ணுவப் பயிற்சி பெற்றுக் கொணடதாக சந்தேக நபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலைச் சம் பவத்துடன் தொடர்புடைய, சந் தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்ட நபர்களின் வங்கிக் கணக்குகளுக்கு பிரான்ஸ் மற் றும் இந்தியாவிலிருந்து பெருந் தொகைப் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து இயங்கி வரும குழுவொன்றே இந்தக் கொலைச்சம்பவத்தை மேற் கொண்ட நபர்களை வழிநடத்தி யுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரி கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளது.

# போர்க் குற்றவாளிக்கு இராஜதந்திர சிறப்புரிமையா?



## பிரித்தானியாவில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

லணடனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில், பாதுகாப்பு ஆலோ சகராக பணியாற்றும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந்திர விலக்குரிமைக்கு எதிராக பிரித் தானிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந்திர விலக்குரிமையை பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் நீக்க வேண்டும் என்றும், அதன் மூலம் அவருக்கு எதிராக லண்ட னில் சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இரா ஜதந்திர விலக்குரிமையை நீக்க மறுத்தால், பிரித்தானிய வெளி விவகாரப் பணியகத்தினால், அவரை நீதிமன்ற உத்தரவுப்படி நாடு கடத்த முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கு எதி ரான இறுதிப்போரில் இடம் பெற்ற போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா நீதியின் முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் இந்த வழக் கில் கோரப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான போரில், முகமாலைப் பகுதியில் இருந்து முல்லைத்தீவை நோக்கி கரை யோரமாக முன்னேறிய இலங்கை இராணுவத்தின் 55 ஆவது டிவிசனுக்கு மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவே தலைமை தாங்கியிருந்தார்.

# கொலை அச்சுறுத்தல்



(கொழும்பு)

அமைச்சர் ஒரு வரும் மகாண சபை உறுப்பி னர்கள் சிலரும் தனக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்று பெந்தர எல்பிட்டிய தொகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரான கீதா குமார சிங்க தெரிவித்துள்ளார்.

தனது அரசியல் பிரபல்யத் தையும் எதிர்காலச் செயற்பாடு களையும் இல்லாமல் செய்வதற் காகவே இவ்வாறு தன்னைக் கொலை செய்ய முயற்சிக் கின்றனர். ஒரே கட்சிக்குள் இருந்து கொண்டு அவர்கள் இவ்வாறு செயற்படுவது மக்கள் மத்தியில் பிழையான எண்ணங்களைத் தோற்று விக்கும்.

# அழுத்தம் கொடுத்தே அமெரிக்கா வாக்குகளைப் பெற்றது



## அழகப்பெரும ஆதங்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனிதவுரி மைகள் பேரவையில் நிறை வேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர் பாக அண்மைக்காலங்களாக பலதரப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின் றன.

இலங்கைக்கு எதிராக தமது வாக்குகளைப் பிரயோகித்த நாடுகள் தொடர்பாக சில அமைப்புகள் போன்றே அமைச் சர்களும் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதேவகையில், கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொனறில் கலந்து கொண்டு உரையாற்றிய இளை ஞர் விவகார, திறனபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும, சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் குறித்து கருத்து வெளியிட்டார்.

பிரேரணையைச் சமர்ப்பிக்கும் முன்னதாக மார்ச் 22 ஆம் திகதி வரை அது அமெரிக்காவின் யோசனையாக மாத்திரமே, இருந்தது.

அது சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 23 ஆம் திகதியிலிருந்து சர்வதேச சமூகத்தின் பிரேர ணையாக மாறியது.

வெளி உலகுக்குத் தெரியாமல் அங்கத்துவ நாடுகள் மீது அழுத்தம் பிரயோகித்தும், வலியுறுத்தியுமே வாக்குகள் பெற்றமை தமக்குத் தெரியும் என்றும் அமைச்சர் டலஸ் அழகப் பெரும குறிப்பிட்டார்.

# செலான் வங்கி தலைவர் பதவி விலகினார்

புகழ்பெற்ற வங்கியியலாளரான ஈஸ்ட்மன் நாரங்கொட - செலான் வங்கியின் தலைமைப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். சாதனைமிகுந்த தனது மூன்று வருட சேவைக்காலத்தின் பின்னர் அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற வருடாநத பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர், தனிப் பட்ட காரணங்களினால் தான் இந்த முடிவை எடுத்ததாக அறிவித்தார்.

2008 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி செலான் வங்கி பி.எல்சி.யின் தலைவராக நிமிக்கப்பட்ட ஈஸ்ட்மன் நாரங்கொட, செலான் வங்கியின் திருப்பத்திற்கு முக்கிய பங்காற்றியதுடன், குழப்ப மான சூழல் நிலவிய காலப்பகுதியில் வங்கியானது உறுதிமிக்க தாகவும் போட்டிகரமான ஒன்றாகவும் தோற்றம் பெறுவதற்கான வழியாக அமையும் அடித்தளத்தை இட்டார்.

ஈஸ்ட்மன் நாரங்கொட ஏனைய தனது சக பணிப்பாளர்களுடன் இணைந்து, இலங்கையின் வங்கியியல் துறையில் வல்லமை மிக்க ஒரு வங்கியாக செலான் வங்கியை அதனது பழைய ஸ்தானத் திற்கு கொண்டு வந்தார். இதனால் 2008 ஆம் ஆண்டில் உலகில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு நிலையினைத் தொடர்ந்து எழுந்த நெருக்கடிச் சூழலை எதிர்கொண்டு, தாக்குப்பிடித்து அதன் பின்னர் மீண்டும் கூடுமான வரை பலமிக்க நிலைக்கு வளர்ச்சி யடைந்த ஒரு சில நிறுவனங்களுள் ஒரு முன்னுதாரணமாகவும் செலான் வங்கி திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# New to Australia



Malar was new to Australia. She came to Australia speaking only her native language. She brought her 8-year-old son with her. He was all she had in the world.

They found an apartment in Sydney. They were there for only two months when a neighbor's dog jumped over the fence.

The dog ran toward Malar's son. Malar put her body in between the dog and her son. The dog stopped when it saw Malar screaming at it. She was going to punch it in the nose. The dog turned around.

Shaking, Malar took her son upstairs. They stayed in the apartment all weekend. Then Malar found another apartment, close to the school that her son was going to attend.

She and her son walked everywhere. One day her son started coughing badly. He had an asthma attack. All the walking was making his asthma worse.

Malar knew that she had to buy a car. So she called up the Toyota dealer. She talked to a salesman who spoke her language. She told him that she wanted to buy a new car if he could come over to pick her up. The salesman said he would be right over.

# My Shadow

-by: Robert Louis Stevenson-



I have a little shadow that goes in and out with me,
And what can be the use of him is more than I can see.
He is very, very like me from the heels up to the head;
And I see him jump before me, when I jump into my bed.

The funniest thing about him is the way he likes to grow—
Not at all like proper children, which is always very slow;
For he sometimes shoots up taller like an india-rubber ball,
And he sometimes goes so little that there's none of him at all

He hasn't got a notion of how children ought to play,
And can only make a fool of me in every sort of way.
He stays so close behind me, he's a coward you can see;
I'd think shame to stick to nursie as that shadow sticks to me!

One morning, very early, before the sun was up,
I rose and found the shining dew on every buttercup;
But my lazy little shadow, like an arrant sleepy-head,
Had stayed at home behind me and was fast asleep in bed.



Do your homework if you're in school! Don't procrastinate, finish it last minute, or copy someone's paper. The homework is there for practice, and when you do it, you'll become more confident in that subject. But remember, homework time is not the same as study time, so you can't count homework as studying.



Find a hobby that interests you. Many people increase their intelligence by attempting to get better at something that they're already good at. For example, not only does it make a computer programmer look smarter if they know C++, but it can help you with your job.



Surround yourself with intelligent people. Being around people that are smarter than you can help you become more knowledgeable.



Read the news. Keeping up with current events will let you know what's going on in the world, while also exercising step 3.

# (Use a/an - Vowels and Consonant)

ஆங்கிலத்தின் மொத்த 26 எழுத்துக்களில் உயிர் எழுத்துக்கள் - 5, மெய் எழுத்துக்கள் - 21 ஆகும்.

**உயிர் எழுத்துக்கள** Vowels Sound

a e i o u = 5

**மெய் எழுத்துக்கள** Consonant Sound

b c d f g h j k l m n p q r s t v w x y z = 21

பொதுவாக ஆங்கிலத்தில் ஒரு/ஓர் என்பதைக் குறிக்க பெயர்ச்சொற்களுக்கு முன்பாக ய, an சுட்டிடைச் சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றில "a" பயன்படுத்தும் இடங்கள் எவை? "an" பயன்பத்தும் இடங்கள் எவை? என்பதைப் பார்ப்போம்.

பொதுவாக மெய் எழுத்துக்களில் ஆரம்பிக்கும் பெயர்ச் சொல்லுக்கு முன்னால் "a" பயன்படுத்துகின்றது. உதாரணமாக:

I am a Sri Lankan

நான் ஒரு இலங்கையன்.

I am a student.

நான் ஒரு மாணவன்.

This is a car

இது ஒரு மகிழுந்து.

This is a book.

இது ஒரு புத்தகம்.

He is a teacher.

அவர் ஒரு ஆசிரியர்.

பொதுவாக a, e, I, o, u போன்ற உயிர் எழுத்துக்களில் ஆரம்பிக்கும் பெயர் சொற்களுக்கு முன்னால் ஓர/ஒரு என்பதைக் குறிக்க "an" பயன்படுத்தப்படுகின்றது.

**உதாரணம்:**

This is an animal - (animal begins with a vowel sound)

இது ஒரு மிருகம.

I am an Indian

நான் ஒரு இந்தியன்.

I am an English teacher

நான் ஒரு ஆங்கில ஆசிரியர்.

He is an old man

அவர் ஒரு வயதான(வர்) மனிதர்.

கவனிக்கவும்

மேற்கூறிய விதிமுறைகள் மாறுபடும் இடங்களும் உள்ளன. கீழுள்ள உதாரணங்களைப் பாருங்கள். உயிர் எழுத்துக்களான a, e, I, o, u போன்ற பெயர்ச் சொல் முன்னால் வந்தாலும் 'a' வாகவே பயன்படுபவைகள்.

a user - யூசர் என்பதன் சத்தம 'c" சத்தமாக இல்லாமல "A" வாக ஒலிப்பதால 'a' பயன்படுத்தப் படுகிறது. (sounds like 'yoo-zer>' i.e. begins with a consonant 'y' sound> so 'a' is used)

a university - இதன் சத்தமும் 'உ' சத்தமாக இல்லாமல் 'யு' என்றே ஒலிப்பதை அவதானியுங்கள்.

a European country – இதிலும் 'இ' சத்தமாக இல்லாமல் 'யு' போன்று ஒலிப்பதே அதற்கான காரணம். (sounds like 'yer-o-pi-an>' i.e. begins with consonant 'y' sound)

மெய் எழுத்து முன்னால் வந்தும் 'an' பயன்படும் இடங்கள்.

an hour - என்பதில "hour" என்பதில் "our" போல் 'அ' உயிர் எழுத்தின் சத்தமாக ஒலிப்பதால் இவ்வாறு "an" பயன்படுத்தப்படுகின்றது. (sounds like 'a-our,' begins with vowels 'a' sound) an honour - இதுவும் 'அ' உயிர் எழுத்தின் சத்தமாகவே ஒலிக்கிறது.

இதற்கான காரணம் உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் என்று மட்டும் பார்க்கப்படாமல், உயிர் எழுத்துக்களாக ஒலிப்பவைகள், மெய் எழுத்துக்களாக ஒலிப்பவைகள் என உச்சரிப்புக்கு அமையவே இவ்வாறு பயன்படுத்தப் படுகின்றதாம்.

இது போன்ற பயன்பாடுகளின் பொழுது ஆங்கிலேயர்களும் பிழை விட்டுவிடும் சந்தர்ப்பங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவற்றை நாம் கவனமாக அவதானித்துக் கற்பது மிகவும் பிரயோசனமானதாக இருக்கும்.

# 10 Things Women Do Better Than Men

**1. We evolve hotter.**



A recent study revealed that women are getting better looking through evolution; meanwhile, men are staying the same. After following more than 2,000 people through four decades of life, the study showed that attractive women had 16 percent more children than average-looking chicks and that beautiful people are 36 percent more likely to have a daughter as their firstborn. All those gorgeous daughters mean more beautiful women than in past generations.

**2. We survive car accidents more often.**



This is sad but true: Men are 77 percent more likely to die in a car accident than women, according to a study done by Carnegie Mellon University. Our boyfriends should be thanking us when we nag them to "Wear your seatbelt!"

**3. We're better at seeking comfort.**



A Mind survey of 2,000 people revealed that women are far more likely than men to talk through their problems. Fifty-three percent of women talk to their friends about what's stressing them out, as opposed to 29 percent of men.

**4. We're more recession-proof.**



According to the Bureau of Labor Statistics, 80 percent of those who have lost their jobs since December 2007 have been men. Ouch. This could be because male-dominated fields have been hit the hardest, like manufacturing and finance. That really sucks...but hey, maybe it's time more men became nurses and educators.

**5. We graduate college more often.**



We already know that female enrollment is higher than male, but the Department of Education's statistics reveal that men are also less likely than women to graduate and get their bachelor's degrees. Men are also more likely to take longer than five years to complete their degree.

**6. We eat healthier.**



A survey of more than 14,000 people, conducted by the University of Minnesota, showed that women choose far healthier foods than men. While men are more likely to chow down on frozen pizza and red meat, women are piling fruits and veggies onto their plates. It all sounds pretty obvious, but we get so much grief for our chocolate addictions that we just had to point this one out!

**7. We have stronger immune systems.**



No wonder men act like such babies when they have a sniffle — women really do have stronger immune systems than men! If there are little battles going on in our bodies, women have a secret weapon: estrogen. A study done by McGill University indicated that estrogen gives women an edge when it comes to fighting off infections. That's because estrogen confronts a certain enzyme that often hinders the body's first line of defense against bacteria and viruses.

**8. We live longer.**



Among the world's population of those who are over 100 years old, 85 percent are women, according to the New England Centenarian Study. In general, women continue to live five to 10 years longer than men as well.

**9. We're better managers, especially in this economy.**



This one is a little controversial, but a slew of experts are confident that women make greater bosses because they are better listeners, mentors, problem solvers, and multitaskers than their male counterparts. In a recent Daily News article, management expert Jay Forte said, "It's a very service-oriented economy [right now], so you need employees to be motivated. Women are better connectors than men and more astute about knowing how to activate passion in their employees."

**10. We invest better.**



A study of 100,000 portfolios showed that women's investment returns outperform men's, 18 percent to 11 percent. This could be because women are typically more cautious with their investment decisions and think longer term.

# Yogarswami

## A Masterful Life

**He held Truth in the palm of his hand, spreading love and knowledge of Siva.**

1872-1964: At 3:30am on a Wednesday, in May of 1872, a son was born to Ambalavanar and Sinnachi Amma not far from the Kandaswamy temple in Maviddapuram, Sri Lanka. He was named Sadasivan. His mother died before he reached age 10. His aunt and uncle raised him. In his school days he was bright, but independent, often studying alone high in the mango trees. After finishing school, he joined government service as a storekeeper in the irrigation department and served for years in the verdant backwoods of Kilinochchi.

The decisive point of his life came when he found his guru outside Nallur Temple in 1905. As he walked along the road, Sage Chellappan, a disheveled sadhu, shook the bars from within the chariot shed where he camped and shouted loudly at the passing brahmachari, "Hey! Who are you?" Sadasivan was transfixed by that simple, piercing, inquiry. "There is not one wrong thing!" "It is as it is! Who knows?" the jnani roared, and suddenly everything vanished in a sea of light. At a later encounter amid a festival crowd, Chellappa ordered him, "Go within; meditate; stay here until I return." He came back three days later to find Yogawami still waiting for his master.

Yogaswami surrendered himself completely to his guru, and life for him became one of intense spiritual discipline, severe austerity and stern trials. One such trial, ordered by Chellappa, was a continuous meditation which Chellappa demanded of Sadasivan and Kathiravelu in 1909. For 40 days and nights the two disciples sat upon a large flat rock. Chellappa came each day and gave them only tea or water. On the morning of the fortieth day, the guru brought some stringhoppers. Instead of feeding the hungry yogis, he threw the food high in the air, proclaiming, "That's all I have for you. Two elephants cannot be tied to one post." It was his way of saying two powerful men cannot reign in one place. Following this ordination, their sannyas diksha, he sent the initiates away and never received them again.

Chellappa passed in 1911. Yogaswami, obeying his guru's last orders, sat on the roots of a huge olive tree at Colombuthurai. Under this tree he stayed, exposed to the roughest weather, unmindful of the hardship, and serene as ever. This was his home for the next few years. Intent on his meditative regime, he would chase away curious onlookers and worshipful devotees with stones and harsh words. After much persuasion, he was convinced to move into a nearby thatched hut provided by a devotee.

Few recognized his attainment. But this changed significantly one day when he traveled by train from Colombo to Jaffna. An esteemed and scholarly pandit riding in another car repeatedly stated he sensed a " great jyoti" (a light) on the train. When he saw Siva Yogaswami disembark, he cried, "You see! There he is." The pandit cancelled his discourses, located and rushed to Siva Yogaswami's ashram, prostrating at his feet. His visit to the hut became the clarion call that here indeed was a worshipful being.

From then on people of all ages and all walks of life, irrespective of creed, caste or race, went to Yogaswami. They sought solace and spiritual guidance, and none went away empty-handed. He influenced their lives profoundly. Many realized how blessed they were only after years had passed. Yogaswami's infinite compassion never ceased to impress. He would regularly walk long miles to visit



Chellachchi Ammaiyar, a saintly woman immersed in meditation and tapas. Yogaswami would feed her and attend to duties as she sat in samadhi. Upon her directive, her devotees, some the most learned elite of Sri Lanka, transferred their devotion to Satguru Yogaswami after her passing.

He would mysteriously enter the homes of devotees just when they needed him, when ill or at the time of their death. He would stand over them, apply holy ash and safeguard their passage. He was also known to have remarkable healing powers and a comprehensive knowledge of medicinal uses of herbs. Countless stories tell how he healed from afar. He would prepare remedies for ill devotees. Cures always came as he prescribed. When not out visiting devotees, Yogaswami would receive them in his hut. From dawn to dusk they came and listened, rapt in devotion.

In 1940, Yogaswami went to India on pilgrimage to Banaras and Chidambaram. His famous letter from Banaras states, "After wanderings far in an earnest quest, I came to Kasi and saw the Lord of the Universe—within myself. The herb that you seek is under your feet."

One day he visited Sri Ramana Maharshi at his Arunachalam Ashram. The two simply sat all afternoon, facing each other in elequent silence. Not a word was spoken. Back in Jaffna he explained, "We said all that had to be said."

Followers became more numerous, so he gave them all work to do, seva to God and to the community. In December, 1934, he had them begin his monthly journal, Sivathondan, meaning both "servant of Siva" and "service to Siva." As the years progressed, Swami more and more enjoyed traversing the Jaffna peninsula by car, and it became a common sight to see him chaperoned through the villages.

On February 22, 1961, Swami went outside to give his cow, Valli, his banana leaf after eating, as he always did. Valli was a gentle cow. But this day she rushed her master, struck his leg and knocked him down. The hip was broken, not a trivial matter for an 89-year-old in those days. Swami spent months in the hospital, and once released was confined to a wheelchair.

Devotees were heart-stricken by the accident, yet he remained unshaken. He ever affirmed, "Siva's will prevails within and without—abide in His will."Swami was now confined to his ashram, and devotees flocked to him in even greater numbers, for he could no longer escape on long walks. He was, he quipped, "captured." With infinite patience and love, he meted out his wisdom, guidance and grace throughout his final few years.

At 3:30 am on a Wednesday in March of 1964, Yogaswami passed quietly from this Earth at age 91. The nation stopped when the radio spread news of his Great Departure, and devotees thronged to Jaffna to bid him farewell. Though enlightened souls are often interred, it was his wish to be cremated. Today, a temple complex is being erected on the site of the hut from which he ruled Lanka for 50 years.

# திருநெல்வேலி பகுதியில் குப்பைகள் அகற்றப்பட்டன

## தினமுரசு செய்திக்கு கைமேற்பலன்



(ருஷர்ன்)

குப்பைகள் குவிந்து வீதியோரப் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த இரண்டு இடங்களில் நேற்று முன்தினம் நல்லூர்ப் பிரதேசபை வாகனங்கள் குப்பைகளை அகற்றித் துப்புரவாக்கின.

கொக்குவில் ஆடியபாதம் வீதி - கோவில் வீதிச் சந்திக்கு அருகே குவிக்கப்பட்டிருந்த குப்பைகள், வீதியில் சிதறி போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதை நேற்று முன்தினம் தினமுரசு சுட்டிக்காட்டியிருந்தது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் காலையில் நல்லூர் பிரதேசசபைக்குச் சொந்தமான குப்பை அகற்றும் வாகனம் அந்த இடத்தில் குப்பைகளை அகற்றியது.

அந்த இடத்தில் குப்பைகள் கொட்டப்படுவதால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக பிரதேசசபை ஊழியர்களிடம் சுட்டிக்காட்டிய போது, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இந்த இடத்தில் குப்பைகள் அகற்றப்படுவதாகவும், குப்பைகளை நாய்கள், கோழிகள் கிளறுவதாலேயே அது வீதியில் சிதறுவதாகவும் கூறினார்.

"சிலர் செத்த நாயையும் கொண்டுவந்து இதுக்கைதான் போடீனம். இதுக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்றும் கேள்வியெழுப்பினார் அந்த ஊழியர்.

எனினும், அந்த இடத்தைக் குப்பை போடுவதற்கென ஒதுக்கினால், உரிய முறையில் ஒரு பாதுகாப்பு அணை இடப்பட்டு குப்பைகள் வீதியில் சிதறி பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் ஒழுங்குகள் செய்தால் நல்லது என அந்தப்பகுதி வாசியொருவர் கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, திருநெல்வேலிச் சந்தைக்குப் பின்புறமாகவுள்ள பாடசாலை வீதியில் கொட்டப்பட்டிருந்த குப்பைகளும் அன்றைய தினம் நல்லூர் பிரதேசசபை குப்பை அகற்றும் வாகனங்களால் அகற்றப்பட்டன. இந்த இடத்திலும் குப்பைகளைக் கொட்டுவதற்கென ஒரு பாதுகாப்பான ஒழுங்கு செய்யப்படவேண்டும் என்று அந்தப் பகுதி வாசிகள் தெரிவித்தனர். (சி)

# தக்காளி இறக்குமதி; விவசாயிகள் பாதிப்பு



(பகீ)

உள்ளூரிலேயே போதுமான அளவு தக்காளிப் பழம் உற்பத்திசெய்யப் படுகின்ற நிலையில், தம்புள்ளையில் இருந்தும் பெருமளவான தக்காளிப்பழம் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றமையினால் உள்ளூர் விவசாயிகள் மற்றும் மரக்கறி வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர்.

திருநெல்வேலிச் சந்தையில் தக்காளிப்பழங்கள் தேவைக்கு அதிகமாக காணப்படுவதால் தக்காளிப்பழத்தின் விலை நன்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தற்போது தக்காளிப்பழம் ஒரு கிலோ 30முதல் 40வரை ரூபாவுக்கே விற்கப்படுவதாகவும், தினமும் பெருமளவான தக்காளிப்பழங்கள் அழுகிய நிலையில் கொட்டப்படுவதாவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தக்காளிப்பழ ஜாம்(பழக்கலவை) தயாரிப்பதற்காக மொத்தமாக கொள்வனவு செய்யும் கொள்வனவாளர்கள்கூட மூலதனத்திற்கு ஏற்றவகையில் இலாபம் கிடைக்காத காரணத்தால் தக்காளிப் பழங்களை பெருமளவு கொள்வனவுசெய்யத் தயங்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது யாழ்ப்பாணத்தில் காணப்படும் அதிக வெப்பநிலை காரணமாக வெங்காயம் மற்றும் தக்காளிக் கன்றுகள் கருகி அழிவடைவதாக விவசாயி ஒருவர் குறிப்பிட்டார். (சி)

# குண்டும் குழியுமான நிலையில் சங்கானை வைத்தியசாலை வீதி



(கஜந்தா)

சங்கானை பொதுப் பிரதான வைத்தியசாலை வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக அப்பிரதேச மக்கள் மற்றும் வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் கவலை தெரிவித்தனர். அத்துடன், சங்கானை வைத்தியசாலை வீதியை அண்மித்த ஒழுங்கை வீதிகளும் மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் சங்கானைப் பிரதேசசபையிடம் கேட்டபோது, நிதிப் பற்றாக்குறை காரணமாகவே இந்த வீதிகளைப் புனரமைக்க முடியாது உள்ளதாகவும், 2013 ஆம் ஆண்டிலேயே புனரமைப்பினை மேற்கொள்ள முடியும் எனவும் சங்கானை பிரதேசசபையினர் தெரிவித்தனர். இருப்பினும், தற்காலிகமான வீதிப் புனரமைப்பினையாவது தற்போது மேற்கொள்ள வேண்டும் என அப் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டனர். (சி)

# சிவஞானபிள்ளையாருக்கு கொடியேற்றம்

(பகீ,பவு)

யாழ்-நல்லூர் சிவஞானபிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கடந்த வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலய உறுப்பினர் இ.சண்முகநாதன் இல்லத்திலிருந்து மங்கள வாத்தியங்களுடன் கொடிச்சீலை ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டது. அதனையடுத்து அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் காலை 9.00 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள இந்தத்திருவிழாவின் தேர்த் திருவிழா எதிர்வரும் ஏப்ரல் 8ஆம் திகதி காலை 7.30 மணிக்கும், தீர்த்தத் திருவிழா 9ஆம் திகதி காலை 8.00 மணிக்கும் நடைபெற்று அன்றையதினம் மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கம் நடைபெற வுள்ளது. (சி)



# பதிவிறக்கப் பெட்டகம்

யாரையும் விட உயர்ந்தவன் என்றோ, யாரையும் விடத் தாழ்ந்தவன் என்றோ என்னை நான் மதிப்பிட்டுக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் மற்றவர்களிலிருந்து வேறானவர் என்பதைப் போல நானும் யாரிலிருந்தும் வேறானவன் என்று மட்டும் உணர்ந்திருக்கிறேன். – ஹஸ்லிற்

என் மனதினிடம் எனக்கு எந்த மரியாதையும் இல்லை. ஆனாலும் அது சொல்வதைத்தான் நான் கேட்கிறேன். – பிரெட் ஹாயில்

'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயன்றி வேறொன்றறியேன்' என்று சொல்லலாம். ஆனால், இன்பம் என்பதன் இலக்கணம் என்ன? எல்லோரும் ஒரே சமயத்தில் இன்புற்றிருப்பதென்பது சாத்தியம்தானா? சிலருடைய இன்பம் பலருடைய துன்பத்தினால்தான் நிகழ்கிறது என்ற உண்மையை மறுத்துவிட முடியுமா? – இ.பா. கதையில்

என்னுடைய உண்மை வெளிவந்து விடாதிருக்க வேண்டுமென்றால் பிறருடைய உண்மைகளை நான் வெளிக்கொண்டு வரலாகாது – இந்தப் பரஸ்பர அன்பிலேயே சமூகநீதிகள் நிலைத்திருப்பதை யார் மறுக்க முடியும்? – நாஞ்சில்நாடன்

எனக்கு ஊக்கமளிக்கும் அறிவுரைகளைக் கொட்டிக் கவிழ்த்துவிடும் ஆவலோடு யாரும் தயவுசெய்து வந்துவிடாதீர்கள். உடல் ஆரோக்கியம் மிக்க ஒருவன் நோய்வாய்ப்பட்ட இன்னொருவனை தன்னுடைய ஆரோக்கியத்தின் ஒரு துளியைக் கொண்டும் உத்வேகப்படுத்திவிட முடியாது. ஒரு மனிதனின் சூழ்நிலைகளை எல்லாம் ஆழ்ந்தறிந்து விடலாம் என்று நீங்களாக முடிவு செய்து விடாதீர்கள்.

– கதே (காதலின் துயரம்)

ஒருவர் காது கேட்க "நன்றி தெரிவிக்கிறேன்" என்பதே ஒரு மென்மையான உறவையும் தருணத்தையும் கூச வைத்து விடும் என்று எனக்குள் அச்சம். – அசோகமித்திரன்

திருட்டு என்பது மனிதகுல வரலாற்றில் மிகப்பெரிய நாகரீகமாக சித்தரிக்கப்பட்டு பேணப்பட்டது என்று சொல்ல வேண்டும். ஆனால் பெயர் மட்டும் வேறாக இருக்கும். சேர மன்னன் பாண்டிய நாட்டை வென்றான் என்றுதான் சொல்வோம். பாண்டிய நாட்டை சேரன் கொள்ளையடித்தான் என்று சொல்வதில்லை. – மா.அரங்கநாதன்

பாடங்களைச் சொல்லித் தந்துவிட்டுப் பரீட்சைகளை வைப்பது பள்ளிக்கூடம். பரீட்சைகளை முதலில் வைத்துவிட்டுப் பிறகு பாடங்களைச் சொல்லித் தருவதுதான் வாழ்க்கை.

– பிரபஞ்சன்

யாருக்கும் காட்டப் போவதில்லை, ஆனாலும் டயரி எழுதுவது ஏன்? நாளை மீண்டும் பார்க்கத்தானே? பதிவானபோது இருந்தவனும், பதிவு செய்தவனும், பதிவினைப் படிப்பவனும் ஒரே உடலில் இருந்தாலும் ஒன்றா? – பி.ஏ.கிருஷ்ணன்

நாம் யோசிக்கக் கற்றுக்கொண்டு விட்டோம். ஆகவே அந்த வித்தையைப் பிரயோகிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் நாம் யோசித்தாலும் யோசிக்கா விட்டாலும் வாழ்க்கை ஒவ்வொரு கணமும் கழிந்துகொண்டே இருக்கிறது. சிந்தனைகள் நமக்கு நாமே கூறிக்கொள்ளும் ஒருவகை சமாதானங்கள்தான். – ஆதவன்

பிரித்தானியரின் அடிப்படை அறமோ ஜனநாயகமோ அற்ற ஒரு அரசியல் அமைப்பையே 'வேற்றுமையில் ஒற்றுமை' என்று மேம்போக்காகக் கூறி வளர்த்து வந்துள்ளோம். 40 ஆண்டுகளாக அவர்கள் காப்பாற்றிய காந்தியின் உயிரை ஒரு ஆண்டுக்கு மேல் காப்பாற்றுவதற்கான அரசியல் ஆரோக்கியம் நம் அரசியல் அமைப்பிற்குள் சாத்தியமாகவில்லை. – ஜமாலன்

ஊற்றுக் கண்ணைத் துல்லியமாகக் கண்டறிய ஓர் உபாயம் உண்டு. அந்த ஈரக்குறுமணற்பரப்பைச் சேற்றுக் குழம்பாக மிதித்துத் துவைத்துவிட்டால் ஊற்று அந்தச் சேற்றைக் கழுவிக்கொண்டு தன் கண்ணைத் திறக்கும். அதனைப் பார்த்து என்ன பண்ணப் போகிறோம்? ஒன்றுமில்லை. பாலை மணலை வண்ணக் கண்ணாடி வழியே பார்த்துப் பரவசப்படுவது போலத்தான். வாழ்க்கை இந்த வண்ணங்களைக் கோருகிறது.

– கவிதாசரண்

உலகமயமாதல் சொல்வதென்ன? ஒரே வகை அறிவு, ஒரே வகை அறிவியல், ஒரே வகை அரசியல், ஒரே வகை விவசாயம், ஒரே வகை சந்தை – இறுதியில் ஒரே வகை போர், ஒரே வகை அழிவு! – பிரேம் ரமேஷ்

# காவிரியில் புதிய அணை கட்ட கர்நாடகத்திற்கு அனுமதி இல்லை



(சென்னை)

காவிரி ஆற்றின் குறுககே கர்நாடகம் புதிய அணை கட்ட முயற்சித்தால் அதை தமிழகம் அனுமதிக்காது என முதல்வர் ஜெயலலிதா உறுதிபடக் கூறியுள்ளார்.

காவிரிப் பிரச்சினை குறித்து தமிழ்நாடு சட்டப் பேரவையில் நேற்று முன்தினம் கொண்டுவரப் பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விக்கு முதல்வர் ஜெயலலிதா பதிலளித்து பேசினார்.

முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு, புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தேன். அப்போது, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடுவது, காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தேன்.

இந்தக் கோரிக்கைகள் குறித்து பிரதமருக்கு கடிதம் மூலமும் வலியுறுத்தினேன். ஆனால், இந்தக கோரிக்கை மத்திய அரசால் இதுவரை நிறை வேற்றப்படவில்லை. அது குறித்து, தமிழக அரசு மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி உத்தரவு மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்படும் வரை, அதன் இடைக்கால உத்தரவு அமுலில் இருக்கும் என்பது தமிழக அரசின் நிலை. கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த காவிரி கண்காணிப்புக் குழுவீன் கூட்டத்தில் அதன் தலைவரும் இதே கருத்தை உறுதி செய்துள்ளார்.

இப்போது நடைமுறையில் உள்ள இடைக்கால உத்தரவின்படி, நீரை விடுவிப்ப தற்கான பாசன ஆண்டு, யூன் முதல் அடுத்த ஆண்டின் மே மாதம் வரையாகும். மேலும், இறுதி உத்தரவில் பாசன காலம் என்பது யூன் 1 ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி வரை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஓடும் பேருந்திலிருந்து குதித்து சீனாவுக்கு எதிராகப் போராட்டம்



அதிபர் ஹூ ஜிண்டாவே டெல்லி வந்தார். திபெத் மீது சீனா செலுத்தி வரும் ஆதிக்கத்தை எதிர்த்து, டில்லியில் தங்கி யுள்ள திபெத் அகதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

(புதுடில்லி)

சீன அதிபர் ஹூ ஜிண்டாவோவுக்கு எதிராக, பேருந்தில் வந்து குதித்து திபெத்தியர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. புதுடில்லியில் பிரிக்ஸ் எனப்படும், பிரேசில், ரஷ்யா, இநதியா,சீனா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு மாநாடு 2ஆவது நாளாக நேற்றுமுன் தினம் நடந்தது. இதில் கலந்து கொள்வதற் காக சீன

# இந்திய அழகி வன்யா



(புதுடில்லி)

சண்டிகாரைச் சேர்ந்த வன்யா மிஸ்ரா (வயது-19), 2012 ஆம் ஆண்டிறகான மிஸ் இந்தியா அழகியாக தெரிவு செய்யப்பட் டுள்ளார்.

2012 ஆம் ஆண்டிற்கான மிஸ் இந்தியா அழகிப்போட்டி மும்பை அந்தேரியில் பெமினா நிறுவனத்தின் சார்பில் நடை பெற்றது.

இப்போட்டியில் நாட்டின் பல் வேறு பகுதிகளில் இருந்தும் அழகிகள் பங்கேற்றனர். அவர்களின் நடை, பழக்க வழக்கம், மற்றும் பொது அறிவு உட்பட பல்வேறு பிரிவுகளில் கேள்விகள் கேட்கப்பட்டது.

இதில் வன்யா மிஸ்ரா கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டி ஒன்றில் வென்றதன் காரணமாக இந்தாண்டிற்கான போட்டியில் எவ்வித சுற்றுக்களிலும் பங்கேற்காமல் நேரடியாக பங்குபெற தகுதி பெற்றார்.

இந்தியச் செய்திகள்

# மின் கட்டண உயர்வு

மின் கட்டண உயர்வு கோலையில் இன்று முதல் அமுலுக்கு வருகிறது. இந்த மின் கட்டண உயர்வால், தொழில் முனை வோர் பெரிதும் அதிர்ச்சி அடைந்து உள்ளனர். மேலும், இந்த மின் கட்டண உயர்வால் உற்பத்தி முடங்கும் அபாயம் நிலை ஏற்பட்டு உள்ளது.

மின் கட்டண உயர்வால், சிறு, குறு தொழிலாளர்கள் பெரிதும் பாதிக் கப்படுவர். மின் பற்றாக்குறை குறையும் நேரத்தில் கூட்டலாம் எனவும், தற்போது கூட்டினால் தொழில் வெகுவாகப் பாதிக்கும் என தொழிற் சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.

# தர்ப்பூசணி அரசியல்

கோடை வெயில் அதிகமானதைப் தொடர்ந்து அ.தி.மு.க. சார்பில் தண்ணீர பந்தல் அமைக்க வேணடும் என்று தொண்டர்களுக்கு அக்கட்சி பொதுச் செயலர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்திருந்தார். இவரது அழைப்பை ஏற்ற கட்சி நிர்வாகிகள் சார்பில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து தர்ப்பூசணி, ரோஸ் மில்க்,மோர் இளநீர், வெள்ளரிக்காய் ஆகிய பழப்பொருட்களை வழங்கி வருகின்றனர்.



# தாவீதின் மகனுக்கு ஓசன்னா!

## தவக்காலச் சிந்தனை

குருத்து ஞாயிறு

இன்று குருத்து ஞாயிறு. ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது. இன்றைய வாசகங்கள் குருத்தோலைப் பவனியைப் பற்றி மட்டும் பேசாமல், ஆண்டவர் இயேசுவின் பாடுகள், இறப்பைப் பற்றியும் பேசுகின்றன. எனவேதான், "பாடுகளின் ஞாயிறு" என்னும் பெயரும் உண்டு.

இன்றைய நாளில் இயேசுவின் பாடுகள், துன்பங்களைப் பற்றிச் சிந்திப்போம். இயேசு மெய்யான மனிதர் என்னும் உண்மையின் அடிப்படையில், இயேசு உண்மையான பாராட்டுதல்களை ஏற்றுக்கொண்டார், மகிழ்ச்சி அடைந்தார் என நாம் நம்பலாம். அதுபோல, அவரைப் பற்றித் தவறான செய்திகள், வதந்திகள் பேசப்பட்டபோது அவர் மனம் புண்பட்டார்.

"ஓசன்னா" என்று புகழ்ப் பாடல் பாடிய அதே மக்கள் கூட்டம், "சிலுவையில் அறையும்" என்று கூச்சலிட்டு ஆண்டவரை இழிவு படுத்தினர். ஆண்டவரைத் தங்கள் அரசராக ஏற்றுக்கொண்ட அம் மக்கள் இறுதியில் ஆண்டவரை எவ்விதம் துன்பப்படுத்துகிறார்கள் என்பதை திருவிவிலியம் வாயிலாக நாம் அறிகின்றோம். இதுவா எமது விசுவாசம்? இயேசுவே உலகை மீட்க வந்தவர்கள் என்று ஏற்றுக்கொண்டுவிட்டு அவரைப் புறந்தள்ளி வேறு காரியங்களில் ஈடுபட்டு திருச்சபைக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதா எமது எண்ணம்? சற்றுச் சிந்திப்போம்!

இயேசு "இறைமகன்'' என்பதன் பொருள் என்ன? இயேசுவிடத்தில் நாம் கடவுளின் பண்புகளைக் காண்கின்றோம். கடவுள் என்றால் யார் என்பதை இயேசு தம் வாழ்வின் வழியாக, சாவின் வழியாக, உயிர்த்தெழுதல் வழியாக நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

கடவுள் அன்பு மயமாக இருக்கிறார் எனவும், அவரிடத்தில் துலங்குகின்ற இரக்கத்திற்கும் மன்னிப்பு வழங்கும் இதய நெகிழ்ச்சிக்கும் எல்லையே கிடையாது என இயேசு நமக்குக் காட்டுகிறார். நாம் உண்மையிலேயே இயேசுவை இறைமகன் என ஏற்று, நம்புகிறோமா?

ஆர்.மதுசன், பாசையூர்.

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஆறாவது பிறந்த நாள்



பெயர்: கேதீஸ்வரன் லிசானுகா
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரீன் பெயர் : ..................................
முகவரி : ..................................
பிறந்த ஆண்டு : ..................................
கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட் டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# தென்கொரிய திட்டம் இரத்து

ஒரிசா மாநிலத்தில் செயற் படுத்தப்படவிருந்த மிக பெரிய திட்டமான 'ஸ்டீல்' எனும் திட்டத திற்கு சுற்றுச்சூழல் அமைச்சகம் வழங்கிய அனுமதியை இரத்துச் செய்துள்ளதாக தேசிய பசுமை ஆணையம் அறிவித்துள்ளது.

ஒரிசா கடற்கரைப் பகுதியில் இத்திட்டம் செயற்படுத்த இருந்த தால், அது சுற்றுப்புறச் சூழலுக்கு பெரும் கேடு விளைவிக்கும் என் பதால் இந்தத் திட்டத்தை தேசிய பசுமை ஆணையம் இரத்து செய் துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் சியோல் பயணத்தின் போது தென்கொரிய ஜனாதிபதியிடம் 'ஸ்டீல்' திட்டம் மிகவிரைவில் செயற்படுத்தப்படும் என்றும் இந்தியாவில் முதலீடு செய்வது நீண்ட கால இலாபகரமானதும் நிலையானதாகவும் இருக்கும் எனவும் உறுதி அளித்துள்ள நிலையில் இந்த இரத்து அறிவிப்புவெளியானமை குறிப்பிடத்தக்கது.



மியான்மர் தலைநகர் ரங்கூனில், அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சுகியை, அமெரிக்க செயலர் ஹிலாரி கிளிண்டன் சந்தித்து பேசினார்.

## கைபேசியிலிருந்து 1500 கிலோ தங்கம்



(பீஜிங்)

சீனாவில் தூக்கி எறியப்பட்ட 100 மில்லியன் கைபேசிகளில் இருந்து 1500 கிலோ தங்கம் பிரித்தெடுக்கப்பட்டுள்ளது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் 1 மில்லியன் கிலோ அளவிற்கு தாமிரம், 30ஆயிரம் கிலோ அளவிற்கு வெள்ளி போன்றவைகளும் பிரித்து எடுக்கப் பட்டுள்ளது.



இதுகுறித்து சீனாவிலிருந்து வெளிவரும் பீபிள்ஸ் டெய்லி பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், சர்வதேச அளவில் ஒவ்வொரு ஆண்டும் 400 மில்லியன் அளவிற்கு கைபேசிகள் தூக்கி வீசப்படுவதாகவும், சீனாவில் மட்டும் 100 மில்லியன் கைபேசிகள் தூக்கி எறியப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க வீரர்களைத் தாக்கினால் கடும் விளைவுகள் ஏற்படும்

### பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினால் மிக கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பாகிஸ்தானை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகள் மீது தாக்குதல் நடத்துவதை ஒரு போதும் ஏற்க முடியாது என்றும், இது நீடித்தால் மாற்று வழிகள் குறித்து அமெரிக்கா ஆராய வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மண்ணிலிருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்த வேண்டிய பொறுப்பு பாகிஸ்தான் அரசுக்கு உள்ளது என்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

ஆப்கானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப்படையினர் தங்களை தற்காத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று பென்டகன் அதிகாரி ஜேம்ஸ் மில்லர் தெரிவித்தார்.

ஆப்கானில் உள்ள அமெரிக்க படையினர் மீது ஹக்கானி குழுவைச் சேர்ந்த தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

இதைத் தடுப்பதற்காக பாகிஸ்தான் இராணுவத்துடன் இணைந்து செயற்பட அமெரிக்கா முன்வந்துள்ளது. கடந்த சில மாதங்களில் பாகிஸ்தான் இராணுவம், ஆப்கான் இராணுவம் மற்றும் நேட்டோ படையுடன் முத்தரப்பு கூட்டத்தை நடத்தியது.

தீவிரவாதிகள் தங்களுக்கு பாதுகாப்பான இடமாக பாகிஸ்தானைக் கருதுகின்றனர். இவர்கள் தான் அமெரிக்கப் படையினருக்கு மிகுந்த அச்சுறுத்தலாக உள்ளனர். இதனால் ஆப்கானில் நேட்டோ படை ஒத்துழைப்புடன் அமைதியை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியில் அவ்வப்போது பின்னடைவு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

## வங்கதேசத்தின் கன்னி செயற்கைக் கோள்



அமெரிக்க நிறுவனத்தின் துணையுடன் வங்கதேசம் தனது முதல் செயற்கைகோளை விண்ணில் செலுத்த உள்ளது.

வங்கதேச டெலிகம்யூனிகேசன் ஒழுங்குமுறை ஆணையம் முதல் கட்டமாக 10 மில்லியன் டொலர் மதிப்பில் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள உள்ளது.

இதுகுறித்து ஸ்பேஸ் பாட்னர்ஷிப் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் இயக்குநர் புருஸ் டி.கர்லெஸ்கி கூறுகையில், அமெரிக்காவின் மேரிலேண்ட் நிறுவனத்துடன் இணைந்து செயற்கைகோள் தயாரிக்கப்பட உள்ளது.

இதன் மொத்த மதிப்பு சுமார் 150 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த செயற்கைகோள் வங்கதேசத்தின் தொலைத்தொடர்புதுறையை மேம்படுத்தும் வகையிலும், பேரிடர் முன்னெச்சரிக்கையை அறிவதற்கும் பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ளது.

மேற்கண்ட வசதிகளுக்காக வங்கதேசம் வெளிநாட்டு செயற்கைகோள்களுக்காக ஆண்டு தோறும் சுமார் 11 மில்லியன் டொலர்வரை வாடகையாக செலுத்திவருகிறது.

## சிறுவர்களின் சிறுநீரில் வேக வைக்கும் முட்டை

### சீனாவில் மூட்டுவலி தீர்க்கிறது



தெருவோர வியாபாரிகள், விடுதி ஊழியர்கள் சீனாவின் டாங்யாங் நகரில் உள்ள ஆரம்பப்பாடசாலைகளில் சிறுவர்களின் சிறுநீர் நிரப்புவதற்காக போத்தல்களுடன் அலைகின்றனர்.

அந்தச் சிறுநீரில் முட்டைகளை வேக வைத்து தெருவோரங்களில் விற்கின்றனர். உடல்நலத்துக்கு மிகவும் நல்லது என்று கூறுவதால், விற்பனை அமோகமாக நடக்கிறது.

பாரம்பரிய உணவு வகைகளில் இதுவும் ஒன்றாம். சிறுநீரில் . வேகவைத்த முட்டைகளைச் சாப்பிட்டால் மூட்டு வலி இருக்காது, சன்ஸ்ட்ரோக்வராது, வாசனையாகவும் இருக்கும். உடல்நலத்துக்கு மிகவும் நல்லது என்று வியாபாரிகள் கூறுகின்றனர். இதை உறுதிப்படுத்த எந்த சரியான விளக்க மும் உள்ளூர் நிர்வாகத்தரப்பில் இல்லை. எனினும் இந்த முட்டை விற்பனையைத் தடுக்கவும் இல்லை.

## ரஷ்யாவில் இந்து கோவிலை இடிக்க உத்தரவு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பார்க்கில் உள்ள மிகப் பெரிய இந்து கோவில் இடிக்கப்படவுள்ளது.

மிகப்பெரிய வேத கலாசார மையமாகத் திகழும் இந்தக் கோவிலை அமைக்கப் போடப்பட்ட 49 ஆண்டுகால நில குத்தகை ஒப்பந்தத்தையும் இரத்து செய்து ரஷயாவில் உள்ள மத்தியஸ்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக கலாசார மையத்தின் தலைவர் சுரேன் காராபெட்யான் கூறுகையில், இந்த விவகாரத்தில் இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி உதவியை நாடவுள்ளோம். இந்தியாவின் கலாசாரத்தையும், ரஷ்யாவின் பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் வகையில் இந்த விவகாரத்தில் இந்தியா தலையிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கோவிலை இடிப்பதைத் தடுக்க வேண்டும் என்று ரஷ்ய ஜனாதிபதியிடம் கோரவுள்ளோம். இந்த விடயத்தில் எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. இங்கு கோவிலைக் கட்டுவதற்காக நில உரிமையாளருடன் 49 ஆண்டுகள் ஒப்பந்தம் செய்திருந்தபோதும், இப்போது சட்டத்துக்கு புறம்பாக கோவிலை இடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வேத கலாசார மையமானது சமஸ்கிருதம், யோகா படிப்புகள் உள்ளிட்ட இந்தியாவின் பாரம்பரியத்தை பிரபலப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகிறது. அதேநேரத்தில் ஒப்பந்த விதிகள் எதையும் மீறவில்லை.

பகவத் கீதைக்கு தடை விதிக்க வேண்டுமென இங்குள்ள கிறிஸ்தவர்கள் கோரிக்கை விடுத்தனர். அது நிராகரிக்கப் பட்டது. இப்போது கோவிலை இடிக்க உத்தரவிடப்பட்டுள்ளதை இந்துக்களுக்கு எதிரான பிரசாரத்தின் ஒரு அங்கமாக இருக்கிறது என்றார்.

இந்த விவகாரத்தில் தங்களுக்கு உதவுமாறு இந்திய குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீலுக்கு ரஷ்யாவில் கலாசார மைய உறுப்பினர்கள் கடிதம் எழுதியுள்ளனர். இந்தக் கோவிலை கட்டுவதற்கு 1992ஆம் ஆண்டு .'.பெடரல் ஆராய்ச்சி மையத்துடன் 49 ஆண்டுகாலம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் 20 ஆண்டுகளே முடிந்துள்ள கோவிலை இடிக்க உத்தரவிடப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தில் இடைத்தேர்தல்; ஆளுங்கட்சி – எதிர்க்கட்சி தோல்வி

இங்கிலாந்தின் வடக்குப் பகுதியில் உள்ள பிரட்போர்டு(மேற்கு) நாடாளுமன்ற தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சி படுதோல்வியைச் சந்தித்தன.

தேர்தல் நடந்து முடிந்து வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் வெளியாகி உள்ளது. இதில் ஆளுங்கட்சியான கன்சர்வேட்டிவ், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி ஆகியவை சார்பில் நிறுத்தப் பட்ட வேட்பாளர்கள் படுதோல்வி அடைந்துள்ளனர்.

இந்த இடைத்தேர்தலில் சிறிய கட்சியான இடதுசாரி மதிகட்சி வேட்பாளர் ஜார்ஜ் காலலோவே 18,341 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.



இவர் போருக்கு எதிராக பிரசாரம் செய்து வருபவர். இரண்டு முறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த அவர் தற்போது முதல் தடவையாக வெற்றி பெற்றுள்ளார்.

ஹீசைன்(தொழிலாளர் கட்சி) 8,201 வாக்குகளும், ஜாக்கி வெயிட்லி(கன்சர்வேட்டிவ் கட்சி) 2,746 வாக்குகளும் பெற்று தோல்வியைத்தழுவினர். இந்தத் தொகுதி தொழிலாளர் கட்சியின் செல் வாக்கு மிகுந்தது. கடந்த 1974ஆம் ஆண்டு தேர்தல் முதல் தொழிலாளர் கட்சியே வெற்றி பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 35 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் 35 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சண்டையில் ஒரு படை வீரர் உயிரிழந்துள்ளார். 4 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒரக்சாய் பகுதியில் உள்ள பலராஸ் மற்றும் கடேசாய் பகுதிகளில் படையினர் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகளுக்கும், படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது

இதில் 35 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையடுத்து தீவிரவாதிகள் வசமிருந்த பலராஸ் பகுதி படையினர் வசம் வந்துள்ளது.




# தெரிந்து கொள்வோம்!

1. அடுத்தடுத்து வேகமாக டைப் செய்கையில் தொடர்ந்து இருக்கும் கீகள் இணைந்து ஜாம் ஆகி நின்றுவிடக் கூடாது என்பதால் தான், கம்ப்யூட்டர் கீ போர்டாக குவெர்ட்டி கீ போர்ட் எடுத்துக் கொள்ளப்பட்டது.

2. இணைய இணைப்பின் வேகம் 8Mb/sec என்று சொன்னால், அது விநாடிக்கு 8 மெகா பிட்ஸ் என்று பொருள். மெகா பைட்ஸ் அல்ல.

3. பெர்சனல் கம்ப்யூட்டர் ஒன்றின் முதலுதவிப் பெட்டியில் எமர்ஜென்ஸி பூட் சிடி அல்லது பிளாஷ் ட்ரைவ் இருக்க வேண்டும்.

4. லப்டொப்பின் பற்றரி திறனை நீண்ட நாள் பாதுகாப்பாகப் பெற, திரையின் வெளிச்சத்தைக் குறைப்பது நல்லது.

5. விண்டோஸ் எக்ஸ்பியின் திரைத தோற்றத்தில் மாற்றப்படா நிலையில் மிகப் பெரிய பச்சைப் புல்வெளி மேடும், பின்னணியில் மலையும் உள்ளதல்லவா? இதனை விண்டோஸ் பிளிஸ் (Bliss) எனப் பெயரிட்டுள்ளது. இந்த அழகான காட்சியைப் போட்டோவாக எடுத்தவர் பெயர் சார்ல்ஸ் ஓ ரியர் (Charles O'Rear). கலிபோர்னியாவில் சொனாமா கவுண்ட்டி என்ற இடத்தில் இந்த போட்டோ எடுக்கப்பட்டது. இதனைப் பின்னர் மைக்ரோசொப்ட் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி, தன் எக்ஸ்பி சிஸ்டத்தில் மாறா நிலையில் உள்ள டெஸ்க்டொப் இமேஜாகப் பயன்படுத்தியது.



# மொபைல் போனுக்கு Dolphin Browser

ஆண்ட்ரோய்ட் மொபைல் போன் பயன்படுத்துவோர்; பலரும் கூகுள் தரும் பிரவுசரையே பயன்படுத்தி வருகின்றனர். கூகுள் இந்த விஷயத்தில் மேற்கொண்ட அசாத்தியமான முதலீடு, முயற்சிகள், மற்றும் பிரவுசர் விஷயத்தில் கூகுள் நிறுவனம் பெற்றுள்ள நல்ல பெயர் ஆகியவற்றால், வேறு பிரவுசரை எண்ணிப் பார்க்கவில்லை.

ஆனால் அதைவிட சிறப்புகளுடன் இருப்பதாகப் புகழப்படும் Dolphin Browser HD.

இதன் பல சிறப்புகள் மெச்சத்தக்கவையாக இருக்கிறது. இது டெஸ்க்டொப் ஸ்டைலில், 'டேப் வழி பிரவுசிங், ஸ்பீட் டயல் மற்றும் அருமையான இன்டர்பேஸ் ஆகியவற்றையும் தருகிறது.

தரவிறக்கம் செய்து போனில் பதிந்தவுடன், இதனை இயக்கவும். உடன் Start now பட்டனில் தட்டவும். அடுத்து கிடைக்கும் Terms of Use திரையில் Accept பட்டனைத் தட்டவும். அடுத்து உங்கள் ராஜ்ஜியம் தான். On demand Flash Support என்பதை தேர்ந்தெடுக்கலாம்.

தொடர்ந்து Perform as Android Phone பின்னர் Add shortcuts to the home screen என்பதில் செக் அடையாளத்தை அப்படியே விடுக. அடுத்து கிடைக்கும் திரை Import Bookmarks. இதில் Dolphin Connect என்பதை தேர்ந்தெடுக்கலாம்.

அடுத்த திரையில் slide features. இங்கு இடது கீழ் புறம் கிடைக்கும் ஸ்டார் தட்டி புக்மார்க் மற்றும் ஸ்பீட் டயலுக்கான தகவல்களை அமைக்கலாம். Add bookmark டயலொக் பொக்ஸ கிடைக்கும். இதே போல Add to Speed Dial டயலொக் பொக்ஸூம் கிடைக்கும்.

இரண்டிலும் தகவல்களை நிரப்ப வேண்டியது தான். இறுதியாக ஓகே கிளிக் செய்திட வேண்டியதுதான். அவ்வளவுதான் உங்கள் பிரவுசர் இயங்க அனைத்தும் ரெடி. டொல்பின் பிரவுசர் தொடக்க பக்கத்தில் இரண்டு டேப் மற்றும் நான்கு ஸ்பீட் டயல் பட்டன்கள் கிடைக்கின்றன. அட்ரஸ் பாரின் இடது பக்கத்தில் Home பட்டன் உள்ளது. Refresh பட்டன் வலது பக்கத்தில் உள்ளது. புதிய டேப் வேண்டும் எனில் மேலாக வலது பக்கத்தில் உள்ள + பட்டனைத் தட்டவேண்டும்.



இந்த இடைமுகத்தில் உள்ள Settings சென்று, பல வசதிகளைப் பயன்படுத்தும் வழிகளை அறிய முடியும். http://dol phinbrowser.com/download/ என்ற இணையதளம் சென்றால், ஐ-போன், ஐ-பேட் மற்றும் ஆண்ட்ரோய்ட் டேப்லட்களுக்கான டொல்பின் பிரவுசர் தொகுப்பு கிடைக்கிறது.

# பிரபஞ்சத்தை அறிய

பிரபஞ்சத்தின் எல்லைகளை இன்னும் யாரும் முழுமையாக நமக்குக் காட்டவில்லை. ஆனால் இதில் அடங்கியுள்ளவை குறித்து நாம் பல தகவல்களைக் கொண்டுள்ளோம். பல தகவல்கள் நாம் அறிந்து ஒத்துக் கொள்ளும் வகையில் தரப்பட்டுள்ளன. சில இன்னும் அனுமானத்திலேயே உள்ளன. நாள் தோறும் ஏதேனும் ஒரு புதிய தகவலை, இந்தப் பிரபஞ்சம் குறித்து நமக்கு விஞ்ஞானிகள் மற்றும் அறிவியல் ஆய்வாளர்கள் தந்துகொண்டுள்ளனர்.

இவை அனைத்தையும் ஓரிடத்தில் நாம் தெரிந்து கொள்ள முடியுமா? சற்று சிரமம்தான். இருந்தாலும், இணைய தளம் ஒன்று இந்தப் பணியில் இறங்கி வெற்றியும் பெற்றுள்ளது. http://static.flabber.net/files/scal eoftheuniverse2.swf என்ற முகவரியில் உள்ள தளம் சென்றால், இந்த அதிசயமான பிரபஞ்ச கலைக் களஞ்சியத்தைக் காணலாம். The scale of the Universe என்று இந்த தளத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.




இந்த தளம் சென்றவுடன் பிரபஞ்சத்தின் ஒரு காட்சி தெரிகிறது. பின்னர், நம் மவுஸின் சக்கரத்தைச் சுழற்ற, நாம் பிரபஞ்சத்தின் உள்ளும் வெளியுமாகச் செல்ல முடிகிறது. இதில் உயிரினங்கள், பொருட்கள், அண்ட சராசரங்களில் உள்ள கோளங்கள் என எத்தனையோ காட்டப்படுகின்றன. ஏதாவது ஒன்று.

குறித்து தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா! உடனே கர்சரை அந்தப் பொருள் அருகே கொண்டு சென்று நிறுத்துங்கள். உடனே சிறிய கட்டத்தில் அந்தப் பொருள் குறித்த விளக்கம் கிடைக்கும். அண்டம் தொடங்கியதில் ஆரம்பித்தால், மனித இனம் தோன்றிய நாள், இன்றைய நிலை என வேகமாக உள்ளே செல்லலாம். சில வேளைகளில் பயமாகவும் உள்ளது. பிரமிப்பாக இருப்பதால் தான், மிகப் பெருமையாக நம்மைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதெல்லாம் வீண் என்ற சிந்தனை நமக்குத் தோன்றுகிறது. பிரபஞ்ச வெளியில் நாம் ஓர் அற்பப்பதர் என்ற எண்ணம் உருவாகிறது.

இருப்பினும் நாம் ஓர் அதிசய உருவாக்கம் என்ற எண்ணமும் ஏற்படுகிறது.

இந்த தளம் பற்றிய ஒரு வீடியோ யு-ட்யூபீ தளத்திலும் உள்ளது. அந்த வீடியோ உள்ள தள முகவரி http://www.youtube.com/ watch?v=uaGEjrADGPA.

# எந்த உலவியைப் பயன்படுத்தலாம்?

இணையத் தொடர்புக்குப் பயன்படுத்த பல பிரவுசர்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவை அனைத்தும் ஒரே மாதிரியான திறனுடனோ, வசதிகளுடனோ அமைக்கப்படுவதில்லை. சில வேகமாக இயங்கும் பல பிரவுசர்கள் தரும் வசதிகள் எண்ணற்றவையாக இருக்கும். பாதுகாப்பு தருவதில் சில பிரவுசர்களை மற்றவை மிஞ்ச முடியாது. சிலவற்றைப் பயன்படுத்திப் பார்த்து அதில் ஏற்பட்ட அனுபவங்களை இங்கு தருகிறோம். உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப, உங்களுக்கான பிரவுசரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

இந்த தேர்வின் போது ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். எந்த பிரவுசரும், அது இயக்கப்படும் கம்ப்யூட்டரின் ஹார்ட்வேர் அமைப்பைப் பொறுத்தே இயங்கும். எனவே, உங்கள் ஹார்ட்வேர் வடிவமைப்புகளையும் கருத்தில் கொண்டு, பிரவு சர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.



நாம் பயன்படுத்திப் பார்க்க எடுத்துக் கொண்டவை அண்மைக் காலத்தில் தரப்பட்ட Chrome 17, Firefox 10, Internet Explorer 9 ஆகியவையாகும். வேகம், பாதுகாப்பு, கூடுதல் வசதிகள் மற்றும் Add-on தொகுப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றைத் தரவரிசைப் படுத்தினோம்.

முதல் இடத்தைப் பிடித்தது கூகுளின் குரோம் பிரவுசர் பதிப்பு 17. இதன ஜாவா ஸ்கிரிப்ட் இயக்கம், இணையப் பக்கம் இறங்குவதில் வேகம், சிறப்பான பாதுகாப்பு வசதிகள் மற்றும் பல Add-on புரோகிராம்கள் இதற்கு முதல் இடத்தை வழங்கியுள்ளன. மொஸிலலாவின் பயர் பொக்ஸ் பதிப்பு 10 அடுத்த இடத்தைப் பிடித்துள்ளது. இதன் எச்.டி. எம்.எல். 5 கிரா பிக்ஸ் இயக்கம் மற்ற எந்த பிரவுசரைக் காட்டிலும கூடுதல் வேகத்தினைத் தருகிறது. இதன் இன்னொரு தனிச் சிறப்பு, இதற்கென உருவாக்கப்பட்டுள்ள பல ஆயிரக் கணக்கான Add-on புரோகிராம்கள்.



இவற்றின் மூலம் இணையத்தில் உலா வருவது எளிதாகவும், வேடிக் கையான ஓர் அனுபவமாகவும் உள்ளது.

மைக்ரோசொப்ட் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9, உங்கள் பிரவுசருக்கான தீம் எதனையும் இது தருவதில்லை. இந்த வகையில் வாடிக்கையாளர்களுக்கு இது ஏமாற்றத்தைத் தருகிறது. மேலும் விண்டோஸ் லைவ் மெஷ பயன்படுத்தாமல், நாம் ஏற்படுத்தி வைத்திருக்கும் பேவரிட் தளங்களின் முகவரிகளை இணைக்க முடியாது. ஆனால், பாதுகாப்பு அம்சங்களைப் பொறுத்தவரை இது சிறப்பாகவே இயங்குகிறது. எச்.டி.எம்.எல். 5 குறியீடுகளை மிக வேகமாக இயக்குகிறது. இந்த இரண்டின் செயல்பாட்டில் இது மற்ற பிரவுசர்களுக்கு இணையாக இயங்குவது குறிப்பிடத்தக்கது.

இனி ஒவ்வொரு உலவியின் நிறை குறைகளைக் காணலாம்.

1. கூகுள் குரோம் பதிப்பு 17: இணைய தளங்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், அவை முடங்கிப் போனால் பிரவுசரின் இயக்கத்திறனை நிறுத்தாமல், அவற்றை மட்டும் மூடும் சிறப்பினை இது கொண்டுள்ளது. இதன் பல அடுக்கு பாதுகாப்பு (Sandbox) கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களைத் தடுக்கிறது. மனதைக் கவராத அம்சங்கள் என்று எடுத்துக் கொண்டால், ஆர்.எஸ்.எஸ். ரீடர் இணைத்துத் தரப்படாத தனைச் சொல்லலாம். அடுத்து இதன் டிசைன் மிகவும் அழகாக இல்லாதது இணையப் பயனாளர்களைக் கவர்வதில்லை.



இதன் மற்ற சிறப்பம்சங்கள்: பயன்படுததுவதில் எளிமை, அதிக எண்ணிக்கையில் எக்ஸ்டன்ஷன் வசதிகள், ஆட் ஒன் புரோகிராம்கள், மிகச் சிறந்த இயக்கம் ஆகியவை. இவை அனைத்தும் தொடக்க நிலை இணையப் பயனாளருக்குத் தெரியாமலோ, தேவை இல்லாமலோ இருக்கலாம். ஆனால், அனைவரின் எதிர்பார்ப்புகளை இது நிறைவேற்றுகிறது. இணையப் பக்கங்களை, அவற்றில் எத்தனை கிராபிக்ஸ் இருந்தாலும், நான்கு விநாடிகளில் இறக்கித் தருகிறது. பெப்ரவரியில் வெளியான இதன் பதிப்பில், இணைய முகவரியை டைப் செய்திடத் தொடங்குகையிலேயே அந்த பக்கத்தைத் தருவது இதன் அதிமுக்கிய சிறப்பாக உள்ளது.

வேறு மொழிகளில் உள்ள இணைய தளம் இறங்குகிறது எனில், உடனே அதனை மொழி பெயர்த்துத் தரும் பணியில் குரோம் இறங்குகிறது. மொழி பெயர்ப்பு மிகச் சரியாக இல்லை என்றாலும், அப்பக்கத்தைப் பற்றி அறிந்து கொள்ள இது உதவுகிறது.

2. மொஸில்லா பயர்பொக்ஸ் பதிப்பு 10: பலவகைச் சிறப்புகளைக் கொண்ட அருமையான உலவி. எச்.டி.எம்.எல். 5 இயக்கம் மற்றும் ஆயிரக்கணக்கான Add-on புரோகிராம்கள் இதன் சிறப்புக்கு அடிப்படை ஆனால் தேவையற்ற அல்லது அதிகமான Add-on தொகுப்புகள், பிரவுசரின் வேகத்தை மட்டுப்படுத்துவது இதன் பலஹீனமே. மார்ச், 2011 இல் பதிப்பு 4 வந்த பின்னர், இன்றுவரை ஆறு பதிப்புகள் வந்துள்ளன, மொஸில்லா வாடிக்கையாளர்களின் தேவைகளைத் தொடர்ந்து கணித்து வருவதனைக் காட்டுகிறது. இதில் டேப்களை குழுக்களாக அமைத்துப் பிரித்து வைத்து எளிதாக இயக்கலாம். பொப் அப் ..பில்டர்,. பிரைவேட் பிரவுசிங் போன்றவை இதன் மற்ற சிறப்புகள்.

3. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9: பாதுகாப்பில் இதன் தனித்தன்மையை மற்ற பிரவுசர்கள் கொண்டிருக்கவில்லை. எச்.டி.எம்.எல். 5 இயக்கத்தில் இதுவே அதிக வேகம் கொண்டுள்ளது. இதன் டேப்களைக் கையாள்வதில் சற்று சிரமமாக உள்ளது. எளிமையில் மிகவும் பின்தங்கி உள்ளது.

ஒவ்வொரு தனி நபருக்குமாக, குறிப்பிட்ட தளங்களைத் தொடர்ந்து தடுத்துவிடும் வசதி தரப்பட்டுள்ளது. தீம்கள் மற்றும் ஸ்பெல்லிங் செக் செய்திடும் வசதி இல்லாதது, பலருக்கு ஏமாற்றத்தைத் தரும்.

# சீலாப்புலம் கிராமத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் உள்ள கெருடாவில் சீலாப்புலம் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கெருடாவில் சீலாப்புலம் கிராமத்தின் தேவைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

கெருடாவில் கிழக்கு சிறீ முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) குறித்த பிரதேசத்தின் மின்சாரம், வீதி புனரமைப்பு, குடிநீர்ப் பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்ததுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இத் தேவைகளை நிறைவு செய்வதற்கான பணிப்புரைகளையும் வழங்கினார்.

பொது மக்களின் பல்வேறு தேவைகள் தொடர்பாகவும் இங்கு கவனத்திலெடுக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வல்வெட்டித்துறை இணைப்பாளரும் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க்கட்சித் தலைவருமான தெய்வேந்திரன், ஈ.பி.டி.பி.யின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர் செந்தில்நாதன், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

# கூரைவேலையில் ஈடுபட்ட பணியாளர் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடமொன்றின் கூரை வேலைகளில் ஈடுபட்டிருந்த போது தவறி வீழ்ந்து இறந்ததாகத் தெரிவித்து ஆண் ஒருவரது சடலம் நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தனியார் கட்டட நிறுவனமொன்றில் தொழில்புரிந்து வந்த கண்டி கொமுஸ்காவத்த சிங்கா வவைச் சேர்ந்த கே.டபிள்யூ. ரஞ்சித் பெரோ (வயது - 41) என்பவரது சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் நிமித்தமே குறித்த சடலம் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. (பா)

# கோமகன் மீண்டும் மகசின் சிறைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மூன்றாம் மாத பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்துவரப்பட்ட யாழ். மாநகர சபை ஆளும்கட்சி உறுப்பினர் முருகையா கோமகன் கூட்ட அமர்வுகளில் பங்குபற்றியதன் பின்னர் நேற்று நண்பகல் மீண்டும் கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்று அவர் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அவரது உறவினர்கள் அவரைப் பார்வையிடவும் அவருக்கான உணவு மற்றும் பொருட்களை வழங்கவும் அனுமதிக்கப்பட்டதாக யாழ். சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் தெரிவித்துள்ளார்.

வழமையாக கைதி ஒருவரை சுமார் மூன்று வரையான உறவினர்கள் பார்வையிட அனுமதிப்பதே வழமை. மாறாக முருகையா கோமகனை அவரது உறவினர்கள் சுமார் அறுவர் பார்ப்பதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவிருப்பதன் காரணமாக அவர் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் யாழ். சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் மேலும் தெரிவித்தார். (பா)

# ஆயுர்வேத வைத்தியசாலையில் கொள்ளையிடுவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் உள்ள தனியார் ஆயுர்வேத வைத்தியசாலையில் மருந்துக்குச் சென்றவர்கள் வைத்தியரின் மனைவியை அச்சுறுத்தி கொள்ளையிட முயன்றுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் 11.30 மணியளவில் எண்ணெய் வாங்கவென மூவர் சென்றுள்ளனர். குறித்த வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாத நிலையில் அவருடைய மனைவி அவர்களுக்கு எண்ணெய் வழங்கியுள்ளார். குறித்த நபர்கள் பணக் கொடுக்கல் வாங்கலில் வைத்தியரின் மனைவியுடன் தகராற்றில் ஈடுபட்டனர்.

இதேவேளை வைத்தியரின் மனைவி மட்டுமே வீட்டில் நிற்பதனை அறிந்துகொண்டவர்கள் அவரை மிரட்டி நகைகளைக் கொள்ளையிட முயற்சித்ததாகத் தெரியவருகின்றது. தற்செயலாக வேறொருவர் அவ்விடத்திற்கு வர களவு முயற்சியில் ஈடுபட்ட மூவரும் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

## அரசுக்கு...

வழங்கிய, உறுதிமொழிகளை நிறைவேற்றினால், தமது கட்சி எதிர்காலத்தில், நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றுவது குறித்து தீர்மானிக்கும் எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

## சகோதரர்களை...

கொண்டு நின்ற கடைசி 2 பிள்ளைகள் நீரில் மூழ்குவதை அவதானித்த மூத்தபிள்ளை தாயை அழைத்துள்ளார். தாய் வருவதற்கு முன்னர் தானும் குளத்திற்குள் இறங்கியுள்ளார்.

ஒருவாறு தாய் குளத்தில் மூழ்கிக்கொண்டிருந்த 2 பிள்ளைகளையும் மீட்டு கரையில் சேர்த்தார். ஆனால் தன்னுடைய சகோதரர்களை காப்பாற்ற இறங்கிய மூத்த பிள்ளை தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டது. ஜெகநாதன் ஜசிந்தா (வயது - 9) என்பவரே பலியானவராவார். (04)

## பேச்சிற்கு...

இராஜதந்திர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றப்பட்ட இந்த யோசனையை அடிப்படையாக கொண்டு, பாரதூரமான யோசனை முன்வைக்கப்படும் ஆபத்து இருபதால், அதனை எதிர்கொள்ள தயாராக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான யோசனை ஒன்றின் மூலம் கடுமையான சர்வதேச தலையீடுகள் ஏற்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிகரெட்...

வாகனங்களின் வரியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்குடன் இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது. இது எரிபொருள் பாவனையை குறைக்கவும் உதவும் என அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் உழவு இயந்திரங்கள், பஸ்கள், லொறிகளுக்கான வரிகளில் மாற்றம் ஏற்படவில்லை.

## நிபந்தனைகளை...

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இடைநிறுத்தப்பட்ட இந்தப் பணத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் கடுமையாக முயற்சிக்கிறது.

இதற்காக பொருட்களின் விலைகளை அதிகரித்தல், வட்டி வீதங்களை அதிகரித்தல், நாணய மதிப்பிறக்கம் உட்பட பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த வரி அதிகரிப்பானது நாளை நடைபெறவுள்ள ஐ.எம்.எவ். கூட்டத்திற்காக தயார் படுத்தப்பட்டதைப் போல் தென்படுகிறது என ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

## கடும்காற்று...

இதனால் அனைத்து உடமைகளும் நனைந்ததுடன், சிறுவர்கள், முதியவர்கள் உட்பட பலரும் பாதிக்கப்பட்டதுடன் குடிசைகளுக்குள் வெள்ளம் நிரம்பி வழிந்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 12 பேர் அம்புலன்ஸ் மூலம் வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தையடுத்து மின்சாரம் நிறுத்தப்பட்டது. சம்பவத்தையடுத்து பொலிஸாரும் முகாம் பொறுப்பதிகாரியும் சேதம் குறித்து பதிவுசெய்யுமாறு கூறிச் சென்றதாகவும் இரவு உணவுக்கு வேறு உதவிகளுக்கோ எவ்வித ஏற்பாடுகளையும் செய்யவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (04)

## ஈ.பி. டி.பி. அமைப்பாளரின்...

ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரனைத் தொடர்பு கொண்டு, எனது மகனை கூட்டி வருமாறு இரண்டு பேரை எனது வீட்டிற்கு அனுப்பினீர்களா? எனக் கேட்டுள்ளார். அதற்கு ஈ.பி.டி.பி அமைப்பாளர், அவ்வாறு யாரையும் அனுப்பவில்லை எதற்காக நான் மகனைக் கூப்பிடுகிறேன் எனக் கேட்ட போது, இங்கு இரண்டு பேர் உங்கள் பெயரைச் சொல்லி மகனைக் கூட்டிப் போக வந்துள்ளனர் எனக் கூறியுள்ளார். அவர்களிடம் உங்கள் மகனை அனுப்ப வேண்டாம் என. அமைப்பாளர் தெரிவித்து, அங்கு வருகிறேன் எனக் கூறியுள்ளார். இந்தத் தொலைபேசிப் பேச்சுக்களை அவதானித்த மர்ம நபர்கள், இந்தச் சந்திக்கு வாறன் எனச் சொன்னவர் எனக் கூறிக் கொண்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

இதனையடுத்து அப்பகுதி கிராமசேவகர் கிருஸ்ணராஜாவுடன் குறித்த வீட்டிற்கு சென்ற ஈ.பி.டி.பி அமைப்பாளர், நடந்த சம்பவத்தை விபரமாகக் கேட்டறிந்த பின்னர், பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். அத்துடன் குழந்தையின் தாயாரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று புகார் செய்தார். சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு வந்த பொலிசார் விசாரணையை மேற்கொண்டு, மர்மநபர்களைத் தேடி வருகின்றனர்.

இதேவேளை வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் இரு கால்களும் செயலிழந்த நிலையிலுள்ள சுதாகரன் உதயகுமாரி என்ற விதவைத் தாயின் மகனான சந்தோஷ் என அழைக்கப்படும் இரண்டரை வயதுடைய பவிஷன் என்ற குழந்தையை கடத்த மர்மநபர்கள் திட்டமிட்டிருந்துள்ளனர். ஈ.பி.டி.பி வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரனுக்கும் அப்பகுதி மக்களுக்கும் உள்ள நல்லுறவு காரணமாகவே இக்கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வடமராட்சியில் ஈ.பி.டி.பி. அமைப்பின் பெயருக்கு ஏற்படவிருந்த களங்கமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

## தெரிவுக்குழு மூலமாகவே....

குறிப்பாக இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதனை தொடர்ந்து நடைமுறைக்கு வந்த 13 ஆவது திருத்தச் சட்டமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் இருப்பதற்கும் இதுவும் ஓர் முக்கிய காரணமாகும்.

இறுதியுத்தத்தில் புலிகள் வடக்கு, கிழக்கு பகுதி மக்களை பணயக் கைதிகளாக வைத்திருந்தமையால் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. அவ்வாறாக மக்களை பயணக்கைதிகளாக வைத்திருந்தமைமையை தடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது அரசினால் வட, கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும், மீள்குடியேறும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் தொடர்பாகவும், முக்கியமாக நிரந்தர வதிவிட தேவைகளின் முக்கியத்துவத்தையும் அது தொடர்பாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் அமைச்சர் இதன்போது எடுத்துக் கூறினார்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளினது விடுதலை மற்றும் அவர்களை சமூகத்தில் இணைப்பது தொடர்பில் அரசு காட்டி வரும் அக்கறை. தொடர்பாகவும், கண்ணிவெடியகற்றல், மீள்குடியேற்றப் பகுதிகளில் இடம்பெற்று வரும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக எடுத்து விளக்கியதுடன், தென்பகுதியில் நிலவும் ஜனநாயக சூழல் போன்றதான ஓர் சூழலே வடபகுதியிலும் இருக்க வேண்டுமெனவும் இதற்காகதான் உறுதியுடன் உழைத்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக எதிர்காலத்தில் வடபகுதியில் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்பவை இருக்க முடியாது. சிவில் நிர்வாகத்தை வலுப்படுத்தி பாதுகாப்புக்கென மட்டுமே படையினர் நிலை கொண்டிருக்கும் சூழலொன்றை உருவாக்குதே எமது நோக்கமாகும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினது இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பரிந்துரைகள் ஏற்கனவே ஈ.பி.டி.பியினால் முன்மொழியப்பட்ட அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களையே உள்ளடக்கியுள்ளது. ஆனாலும் அவ் ஆணைக்குழு தமது பரிந்துரையில் தனது சாட்சியத்தில் கூறப்படாத விடயங்களை ஆதாரபூர்வமாக குறிப்பிட்டு தன்மேல் குற்றம்சுமத்தியுள்ளதையும் அவர்களுக்கு தமது சாட்சிய பதிவேட்டை ஆதாரமாகக் காட்டி விளக்கினார்.

எமது கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், மற்றும் அவர்கள் தடைசெய்யப்பட்ட முறையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதனால் எமது கடல்வளங்கள் அழிக்கப்படுவது, எமது மீனவர்களது மீன்பிடி உபகரணங்கள் பலத்த சேதத்திற்குள்ளாவது இதனால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்தும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலின் போது இலங்கை அரசியல் நிலவரம் தொடர்பில் தாம் அவதானித்து வருவதாகவும், இதன்பிரகாரம் இங்கு வருகை தந்துள்ள தாம் பல்வேறு அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்து வருவதாகவும், வடபகுதிக்கு விஜயம் மேற்கொள்ளும் அதேவேளை இங்கு துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் பிரித்தானியப் பிரதிநிதி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரித்தானியப் பிரதிநிதியின் துணைவியார், இலங்கை வெளிவிவகாரத் துறை அமைச்சின் அதிகாரிகள், அமைச்சரின் இணைப்பாளர் ராஜ்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தனது கழுத்தை வெட்டியவர் வைத்தியசாலையில் அனுமதி

தனது கழுத்தைத் தானே கத்தியினால் வெட்டிய நபர் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயன் (வயது-40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு தனக்குத் தானே கழுத்தில் கத்தியினால் வெட்டிப் படுகாயப் படுத்தினார்.

வீட்டில் தனித்திருந்த வேளையே இவர் இக்காரியத்தைப் புரிந்ததாகவும் கழுத்தில் இரத்தம் பீறிட்ட நிலையில் அயலவர் ஒருவர் இவரது கையில் இருந்த கத்தியைப் பறித்தெடுத்து விட்டு, வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்ததாகவும் தெரியவருகின்றது.

ஏற்கனவே திருமணமான இவருக்கு ஒரு பிள்ளை உள்ள நிலையில் மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)

# நாட்டின் தலைவரை பழிவாங்க இலங்கை மக்கள் அனுமதிக்கார்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

லிபியாவின் தலைவர் கடாபியை போன்று வீதியில் இழுத்துச் சென்று நாட்டுத் தலைவரை பழிவாங்குவதற்கு இந்த நாட்டு மக்கள் ஒரு போதும் இடமளிக்க மாட்டார்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கண்டி போகம்பறை மைதானத்தில் இடம்பெற்ற ஒன்றிணைந்த நாடு என்ற பொதுக்கூட்டத் தொடரின் முதலாவது கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

ஏகாதிபத்தியவாதிகள் பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே எமது நாட்டை கைப்பற்ற முயற்சித்தனர். ஒல்லாந்தர், போர்த்துகேயர், ஆங்கிலேயர் எனப் பலர் பலமுறை முயற்சி செய்த போதும் அவர்களால் எம் மத்தியில் ஒற்றுமை இருக்கும் வரைக்கும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனாலும் நாட்டின் சில பிரதானிகள் அன்றைய அரசருக்கு எதிராக ஆங்கிலேயரிடம் நாட்டை காட்டிக் கொடுத்ததன் காரணமாகவே ஆங்கிலேயரால் எம்மை ஆள முடிந்தது.

ஏகாதிபத்தியவாதத்திற்கும் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே இன்று இங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடியுள்ளீர்கள்.

அரசசார்பற்ற நிறுவனம் என்று கூறிக்கொள்ளும் ஒரு சில அமைப்புகளும் கனவு காணும் சில அரசியல் கட்சிகளும் நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றன. அவர்களுக்கு நான் கூற விரும்புவது, நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற முன் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றுங்கள், அதற்கு பின் நாட்டை பற்றி சிந்திக்கலாம் என்பதாகும். இவர்களது பொய்ப் பிரச்சாரங்களுக்கு ஏமாறாமல் நாட்டின் பாதுகாப்புக்கு அனைவரும் ஒன்று சேர வேண்டும்.

இந்த நாட்டு மக்களுக்கு தேவையான வளமான வாழ்வையும் பொருளாதார ஸ்திரநிலையையும் ஏற்படுத்த அனைவரும் ஒன்று சேருமாறு வேண்டுகின்றேன் என்றார்.

# வாகரையில் கடத்தப்பட்ட இளைஞர் மீட்கப்பட்டார்

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இரவு தனது வீட்டிலிருந்து அடையாளம் தெரியாதவர்களால் கடத்தப்பட்ட இளைஞரை மீட்ட பொலிஸார், சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர்.

பால்சேனை கிராமத்தைச் சேர்ந்த தணிகாசலம் ஆனந்த கிசோர் (வயது-21) என்ற குறித்த இளைஞன் சம்பவதினம் வீட்டிலிருந்த வேளை வாகனமொன்றில் வந்த ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

சேருவில பிரதேசத்திலுள்ள தெகியத்தை கிராமத்தில் இந்த இளைஞரை மீட்ட போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மூவரில் சாரதி ஒருவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரெனவும், ஏனைய இருவரும் அதியமான்கேணி யைச் சேர்ந்த தமிழர்கள் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண தெரிவித்தார்.

வீதித் தடையில் கடமையிலிருந்த பொலிஸாரின் புத்தி சாதுரியமான நடவடிக்கைகள் மற்றும் தொலைபேசி உரையாடல்கள் மூலம் கிடைத்த தகவல்களை வைத்தே இந்த நடவடிக்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், கடத்தல்காரர்கள் கோடிக்கணக்கில் கப்பம் கோரியதாகவும் குறிப்பிட்டார்.

# தூதுவர்களுக்கு ஆலோசனை ஜனாதிபதி மகிந்த தீர்மானம்

ஜெனிவா மனித உரிமை பேரவையில், இலங்கைக்கு எதிராகவும் யோசனைக்கு ஆதரவாகவும் வாக்களித்த 24 நாடுகளில் உள்ள இலங்கை தூதுவர்களை அழைத்து, அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில் சித்திரை புத்தாண்டு காலத்தில், இலங்கை வரவுள்ள இந்தத் தூதுவர்கள், தனித்தனியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, நோர்வே, ஸ்பெயின், இந்தியா, ஹங்கேரி, செக், போலந்து, மோல்டோவா, ருமேனியா, பெல்ஜியம், இத்தாலி, ஒஸ்திரியா, மொஸ்கோ, பெரு, உருகுவே, கொஸ்டரீகா, கௌதமாலா, சிலி, நைஜீரியா, பேனின், லிபியா, மொரிசியஸ் ஆகிய நாடுகளை சேர்ந்த தூதுவர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இலங்கை தூதரங்கள் இல்லாத நாடுகளிலும் தூதுவர்களாக பணியாற்றி வருகின்றனர்.

# ஜெனிவா பிரேரணை தொடர்பாக நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்

## அரசைக் கோருகிறது சர்வமதப் பேரவை

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து, உத்தியோகபூர்வ நிலைப்பாட்டினை அறிவிக்குமாறு சர்வமதப் பேரவை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பாக அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுவரும் மாறுபட்ட கருத்துக்கள் தொடர்பிலும், சர்வதேசம் குறித்தும் உன்னிப்பாக கவனம் செலுத்தியுள்ளதாக சர்வமதப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டினை அறிவிக்குமாறு சர்வ மதப் பேரவையின் செயலாளர் கலாநிதி இத்தேபான தம்மாலங்கார அனுநாயக்க தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தப் பிரேரணை ஒரு சிறந்த வாய்ப்பாகும் என அரசாங்கம் எண்ணுமானால், அதற்கு ஆசிர்வாதமும், ஒத்துழைப்பும் வழங்குவதில் சர்வ மதப் பேரவை மகிழ்ச்சியடையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் தலைமைத்துவம் மற்றும் சிவில் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் இடையிலான ஆக்கபூர்வமான பங்களிப்பு, இலங்கை மீதான காரணமற்ற விமர்சனங்களுக்கு ஆக்கபூர்வமான பதிலாக அமையுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் பல மதங்களையும் சார்ந்த 25 இற்கும் அதிகமான சமயத் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அகதி ஒருவர் மீது அவுஸ்ரேலியாவில் தாக்குதல்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் தென்மேற்கு சிட்னி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வில்லாவூட் அகதிகள் முகாமில் உள்ள இலங்கை அகதி ஒருவர் மீது சேர்கோ என்ற நிறுவன காவலாளிகள் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வில்லாவூட் அகதி முகாம் ஆலோசனைக் குழுவொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை உறுதிப்படுத்தியுள்ள அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்களம், ஒரு நபர் மாத்திரம் சிகிச்சைகளுக்கென வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் சேர்கோ எனப்படும் பாதுகாப்பு நிறுவனத்தில் 20 காவலாளிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அதில் 5 அல்லது 6 பேர் நேரடி தொடர்புபட்டுள்ளதாகவும் அகதி அதிரடி கூட்டணிக் கட்சியின் இயன் ரின்டோல் தெரிவித்துள்ளார்.

# தரமற்ற மின் கம்பங்கள் பொதுமக்கள் விசனம்

அண்மைக்காலமாக யாழில் பல்வேறு பகுதிகளுக்கும் மின் விநியோகத்திற்கென நிர்மாணிக்கப்படும் கொங்கிறீற் மின்சாரக் கம்பங்கள் தரமற்றவையாக இருப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற உடுவில் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் பொதுமகன் ஒருவரால் இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான தரமற்ற மின் கம்பங்கள் மின் விநியோக மார்க்கங்களில் நிர்மாணிக்கப்பட்டு மின் கேபிள்கள் பொருத்தப்படுவதன் காரணமாக கேபிள்களின் பாரம் தாங்காமல் அவை முறிந்து விழும் சம்பவங்களும் பல பகுதிகளில் நடைபெற்றிருக்கின்றன. வாகன விபத்துக்களின் போதும் அவ்வாறு பல தடவை இடம்பெற்றிருக்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மின்சாரக் கம்பங்கள் முறிந்து வீழ்ந்து விடுவதனால் அப்பகுதியினூடாக மின் விநியோகம் தடைப்பட்டு பொது மக்களும் மிகுந்த அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர்.

மேலும் இவ்வாறு ஓட்டுமடச் சந்தியில் நடைபெற்ற சம்பவத்தின் போது முறிந்து வீழ்ந்த கொங்கிறீற் மின்கம்பத்துக்குள் வைக்கப்பட்டிருக்கும் உருக்குக் கம்பிகளின் தடிப்பு குறைவாக இருந்ததும் இதற்கு ஒரு காரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த மின்சார சபை அதிகாரிகளிடத்தில் குறித்த விடயம் தொடர்பாக கவனமெடுக்கும்படி அபிவிருத்திக் குழுவின் தலைவரும், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் அறிவுறுத்தியுள்ளார்.(பா)

# ஜெனிவா தீர்மானம் அரசுக்கு நகைச்சுவை

## கூறுகின்றார் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் நகைச்சுவையாக கருதுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும் அரசாங்கம் தனது முரண்பாட்டுக் கொள்கைகளிலிருந்து சற்றும் மாறவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானத்தை அரசாங்கம் நகைச்சுவையாகவே கருதுகின்றது.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, ஜீ.எல்.பீரிஸ், விமல் வீரவன்ச ஆகியோர் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் ஆதரவுடன் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் ஒரு மேலதிக வாக்கினால் இலங்கை தோல்வியடைந்ததாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கணித தர்க்கத்தை ஏற்றுக் கொண்டால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 35 வீதமான வாக்குகளை மட்டுமே பெற்றுக் கொண்டார்.

கால நேரத்தை விரயமாக்கும் வகையிலான வாதப் பிரதிவாதங்களினால் ஒட்டு மொத்த நாடே பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.